www.padippakam.com

# பொதுவுடமைக் கட்சியின் நிறுவனமும் கட்டமைப்பும்



படிப்பகம்

www.padippakam.com

## அறிமுக குறிப்பு

நாம் 17,18-07-93 திகதிகளில் விவாதித்த பல அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய "கட்சி நிறுவனக்கோட்பாடுகள்" என்ற இப்பூத்தகம் லெனின் தலைமையில் 1921ம் ஆண்டு கட்சியால் எற்கப்பட்டது. இன்று நாம் விவாதித்த பலவிடயங்களை சிறப்பாகப் புரிந்து கொள்ளவும், எதிர்காலத்தில் எமது திட்டம் மேலும் சிறப்பு அடையவும், எமது வேலைமுறைகளைப்பற்றிய ஒரு பரிமாணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இவை உதவும் என நாம் கருதுகின்றோம்.

அந்த வகையில் இப்பூத்தகத்தை விவாதித்து மேலும் விமர்சனங்களையும், சுயவிமர்சனங்களையும் செய்தபடி நாம் முன்னெடுக்கும் வேலையை முன்னோக்கித்தள்ளும். இந்த கட்சிநிறுவனக் கோட்பாடு ஒரு கமினிஸ் கட்சிக்கே சிறப்பாகப் பொருந்தியபோதும், நாம் உருவாக்கிய முன்னணிக்குள் இவைகளில் பல பொருந்தும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளமுடியும்.

இந்த பூத்தகம் தொடர்பான விமர்சனங்களை மூன்றாவது பாதை வரவேற்கும் அதேநேரம் இதை விவாதிக்கக் கோருகின்றது.

இது சோவியத்துக்கான மாதிரியைக்கொண்டுள்ளதை மறந்துவிடாமல் இருக்கும் அதேநேரம் எமதுநாட்டுக்கான மாறுபட்ட புரட்சிநிலைமைகளையும் கவனத்தில் கொள்வது அவசியம். எமது நாடு புதிய ஜனநாயகப்புரட்சிமூலமே விடுவிக்கமுடியும், எனநாம் முன்பே விவாதித்திருந்தோம். சோவியத் மாதிரிகள் நேரடியாக சோசலிஸ கட்டத்தை புரட்சியாக கொண்டிருந்தன. எமது நீண்ட ஆயுதப்போராட்ட வடிவத்தை கவனத்திற் கொண்டு இதை விவாதித்து விமர்சிக்கக் கோருகின்றோம்.

இலக்கம் -01

—மூன்றாவது பாதை.

www.padippakam.com

# பொதுவுடமைக் கட்சியின் நிறுவனமும் கட்டமைப்பும்

## I. பொதுவான கோட்பாடுகள்

**பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை :**

1. நிலவுகின்ற சூழ்நிலைகளுக்கும் கட்சியினுடைய நடவடிக்கைகளின் குறிக்கோளுக்கும் பொருத்தமாக கட்சியின் நிறுவன அமைப்பு **இருத்தல் வேண்டும்.** புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும், அதைத் தொடர்ந்து சோசலிசத்தை அடைவதற்கான இடைக்காலத்திலும், அதாவது பொதுவுடமைச் சமுதாயத்தின் முதல் கட்டத்திலும் பொதுவுடமைக் கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் **முன்னணிப் படையாகவும் முன்னேறிய முதல் படை வரிசையாகவும்** விளங்க வேண்டும்.

2. முழுக்க முழுக்க தவறற்றதும் மாற்றக்கூடாததுமான ஒரு நிறுவன வடிவம் ஏதும் பொதுவுடமைக் கட்சிகளுக்கு இருக்க முடியாது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட சூழ்நிலைகள் தொடர்ச்சியான பரிணாம நிகழ்வு மாற்றங்களுக்கு உள்ளாகிறது; இந்த மாற்றங்களுக்கு ஏற்ற பொருத்தமான வடிவங்களை பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையினுடைய நிறுவன அமைப்பு இடையறாது மேற்கொள்ள வேண்டும். இதுபோலவே ஒவ்வொரு நாட்டினுடைய தனி வகைப்பட்ட சூழ்நிலைகள், குறிப்பிட்ட நாட்டுக் கட்சிகள் மேற்கொள்ள வேண்டிய நிறுவன அமைப்பு வடிவங்களைத் தீர்மானிக்கின்றன.

ஆனால் இத்தகைய பாகுபாட்டுக்கு நிச்சயம் குறிப்பிட்ட வரம்புகள் உள்ளன தனிச்சிறப்புத் தன்மைகள் எதுவாயினும் பல்வேறு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பல்வேறு இடைக்கட்டங்களிலும் உள்ள பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்ட சூழ்நிலைகளின் தன்மை உலகப் பொதுவுடமை இயக்கத்திற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது அனைத்து நாடுகளிலுமுள்ள பொதுவுடமைக் கட்சிகளின் நிறுவன அமைப்புக்குப் பொதுவான அடிப்படையை தோற்றுவிக்கின்றது.

இந்த அடிப்படையில் பொதுவுடமைக் கட்சிகளின் நிறுவனத்தைக் கட்டி வளர்ப்பது 'அவசியம்.' ஆனால் இப்போது உள்ளவற்றுக்கு முற்றிலும் மாறாக புதிய மாதிரியிலான கட்சிகளை நிறுவுவதற்கோ, முற்றும் முழுதான, சரியான நிறுவன வடிவம் மற்றும் உன்னத அமைப்பு விதிகள் என்று ஏதோ ஒன்றுக்கு முயலவோ கூடாது.

**புரட்சிக்கான கருவி:**

3. ஆகப் பெரும்பான்மையான பொதுவுடமைக் கட்சிகளும் இதன் விளைவாக புரட்சிகர உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட கட்சியான பொதுவுடமை அகிலமும் தமது போராட்ட சூழ்நிலைகளில் பொதுவான குணாம்சத்தை —பலம் வாய்ந்த முதலாளித்துவ வர்க்கத்தை இன்னமும் எதிர்த்துப் போரிட வேண்டியதாக இருப்பதைக் —கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றி கொள்வதும், அதனிடமிருந்து அரசியலதிகாரத்தைப் பறித்தெடுப்பதுமே—புதிய மாற்றங்கள் ஏற்படும் வரை— எல்லா பொதுவுடமைக் கட்சிகளுக்கும் பொதுவுடமை அகிலத்திற்கும் வழிகாட்டுகின்ற மற்றும் தீர்மானிக்கின்ற பிரதான லட்சியமாக இருக்கும். **இதற்கேற்ப முதலாளித்துவ நாடுகளில் உள்ள பொதுவுடமைக் கட்சிகளினுடைய நிறுவன நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் காரணி என்னவென்றால் உடமை வர்க்கங்களின் மீதான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியை சாத்தியப்படுத்தும் மற்றும் உத்திரவாதப்படுத்தும் படியான நிறுவனங்களைக் கட்டியமைப்பதாகும்.**

**தலைவர்களின் நிறுவனம்:**

4. எந்தப் பொது நடவடிக்கைக்கும் தலைமை என்பது அவசியமான நிபந்தனை. ஆனால் உலக வரலாற்றில் அதி மகத்தான போரில் (போராட்டத்தில்) தலைமை என்பது அதிமிக புறக்கணிக்க இயலாத ஒன்று. பொதுவுடமைக் கட்சி நிறுவனம் என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியில் பொதுவுடமைவாத தலைமையளிக்கும் நிறுவனம் ஆகும்.

சிறந்த தலைவனாக இருக்க கட்சி சிறந்த தலைமைப் பண்பைக் கொண்டிருக்க வேண்டும். அதையொட்டி நமது நிறுவன வேலையின் பிரதானப் பணியானது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமையிடத்திற்கு திறமையுள்ள பொதுவுடமைக் கட்சிகளைக் கொண்டுவர தகுதி வாய்ந்த, நெறிப்படுத்துகின்ற உறுப்புகளின் (organs) கீழ் கல்வியளித்தல், அமைப்பாக்குதல் மற்றும் பயிற்றுவித்தல் ஆகும்.

5. எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கும் போராட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொதுவுடமைக் கட்சியும் அதன் தலைமை நிறுவனங்களும் ஆகப் பெரும் அளவில் தகவமைத்துக் கொள்ளும் வகையிலும் ஆக மிகப் பெரும் அளவில் தாக்கும் சக்தி கொண்டதாக இருக்கும் வகையிலும் தனது அங்கக சேர்க்கையைக் கொண்டிருப்பது புரட்சிகர வர்க்கப் போராட்டத்திலுள்ள தலைமைக்கு முன் நிபந்தனைகளாகும். மேலும், வெற்றிகரமான தலைமைக்கு பாட்டாளி வர்க்கத்துடன் முற்று முழுதாக நெருக்கமான உறவைக் கொண்டிருப்பது அவசியம். இத்தகைய நெருக்கமான உறவு இல்லாவிடில் தலைமையானது பரந்துபட்ட மக்களுக்கு தலைமை ஏற்றுச் செல்லாது. மாறாக, அதிகபட்சமாகப் போனால், மக்களுக்குப் பின்னால் செல்வதாக இருக்கும்.

ஜனநாயக மத்தியத்துவத்தின் வாயிலாக பொதுவுடமைக் கட்சியில் அங்கக சேர்க்கையானது அடையப்பட வேண்டும்.

## II. ஜனநாயக மத்தியத்துவம் பற்றி

**இது எப்படி இருக்க வேண்டும்?**

6. பொதுவுடமைக் கட்சி நிறுவனத்தில் உள்ள ஜனநாயக மத்தியத்துவமானது—மத்தியத்துவம், பாட்டாளி **வர்க்க ஜனநாயகம் ஆகியவற்றின் உருக்கு வார்ப்படமாக, உண்மையான ஒன்றிணைப்பாக இருத்தல் வேண்டும்.** இந்த ஒன்றிணைப்பு கட்சி நிறுவனம் முழுவதன், இடையறாத பொது நடவடிக்கையை, இடையறாத பொதுப் போராட்டத்தை அடித்தளமாகக் கொண்டே சாதிக்கப்பட முடியும். பொதுவுடமைக் கட்சி நிறுவனத்தில் உள்ள மத்தியத்துவம் பெயரளவிலான மற்றும் இயந்திரகதியான மத்தியத்துவம் என்று பொருள்படாது. ஆனால் பொதுவுடமைவாத நடவடிக்கைகளின் மத்தியத்துவமாக, அதாவது யுத்த நிலைமைக்கும் அதே வேளையில் எந்த நிலைமைக்கும் மாறிக் கொள்வதற்கும் தயாராக உள்ள பலமான தலைமையை உருவாக்குவதாகும். பெயரளவிலான அல்லது இயந்திரகதியான மத்தியத்துவம் என்பது விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரது கரங்களில் 'அதிகாரத்தை' மத்தியத்துவப்படுத்தும் தொழிற்துறை அதிகாரத்துவம் ஆகும். இது பிற உறுப்பினர்கள் மீது அல்லது கட்சி நிறுவனத்திற்கு வெளியில் உள்ள புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகும். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தை நடத்துகின்ற, பொதுவுடமைவாத தலைமையை மத்தியத்துவப்படுத்துகின்ற பொதுவுடமைக் கட்சியானது புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதாக பொதுவுடமைவாதிகளின் எதிரிகள் மட்டுமே குற்றம் சாட்டுவர் அவர்களது இத்தகைய கூற்று அப்பட்டமான பொய்யாகும். பொதுவுடமை அகிலத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஜனநாயக மத்தியத்துவ அடிப்படைக் கோட்பாடுகளுக்கு, அதிகாரத்துக்கான போட்டியோ அல்லது மேலாதிக்கத்துக்கான போட்டியோ அறவே பொருத்தமற்றதாகும்.

**அதிகாரத்துவமுமல்ல, பெயரளவிலான ஜனநாயகமும் அல்ல:**

புரட்சிகரமற்ற பழைய தொழிலாளர் இயக்க நிறுவனங்களில், முதலாளித்துவ அரசில் உள்ளது போன்ற இயல்புடைய, எங்கும் விரவிய இருமை வாதம் (இருமை வாதம்—தனித்தனியாகப் பிரிந்திருப்பது—மொ. ர்.) அதாவது, அதிகாரத்துவத்துக்கும் "மக்களுக்"கும் இடையிலான இருமை வாதம் வளர்ச்சியுற்று இருந்தது. முதலாளித்துவச் சூழலின் (Environment) இந்த நச்சுச் செல்வாக்கின் கீழ் செயல்பாடுகள் பிரிந்திருப்பது—பொது முயற்சியுடைய உயிரோட்டமான அமைப்புக்குப் பதில் பயனற்ற பெயரளவிலான ஜனநாயகத்தை வைப்பதும், ஊக்கமான நிர்வாகிகள், செயல்படாத மக்கள் என்று அமைப்பை பிளவுபடுத்துவதும்—வளர்ச்சியுற்றது. முதலாளித்துவ சூழலின் காரணத்தால் புரட்சிகர தொழிலாளர் இயக்கம் கூட இருமை வாதம் மற்றும் சம்பிரதாய வாதம் என்ற போக்கைத் தவிர்க்க இயலாதபடி வழிவழியாகப் பெற்றுள்ளது.

முறையான மற்றும் விடாப்பிடியான அரசியல், அமைப்பு பணிகளின் மூலமாகவும் இடையறாது செழுமைப் படுத்துவது மற்றும் சரி செய்வது மூலமாகவும் பொதுவுடமைக் கட்சி இந்த எதிர் மறையான பண்புகளை அடியோடு வெற்றி கொள்ள வேண்டும்.

7. சோசலிஸ்டுக் கட்சியை பொதுவுடமைக் கட்சி

www.padippakam.com

யாக மாற்றியமைக்கும் போது பழைய கட்சி அமைப்பை அப்படியே விட்டு வைத்து விட்டு தனது மத்தியத் தலைமையின் கரங்களில் அதிகாரத்தை குவிப்பதுடன் மட்டும் கட்சியானது தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. மத்தியத்துவம் ஏட்டளவில் மட்டும் இல்லாமல் உண்மையில் உணர்வு பூர்வமாக கடைபிடிக்கப் படுவதாக அமைய வேண்டும். இதைச் சாதிப்பது எப்போது சாத்தியமாகும் என்றால் தமது பொது நடவடிக்கைகளிலும், போராட்டத்திலும் இந்த அதிகாரம் (Authority) அடிப்படையிலேயே திறனுள்ள கருவியாக பெரும்பான்மையான உறுப்பினர்கள் உணரும் போதுதான். அப்படி இல்லையெனில் மத்தியத்துவமானது பரந்துபட்ட மக்களுக்கு, கட்சிக்குள்ளேயே உள்ள அதிகாரத்துவமாகத் தோன்றும். எனவே இது அனைத்து வகையான மத்தியத்துவத்துக்கும் அனைத்து வகையான தலைமைக்கும் அனைத்து வகையான உருக்குக கட்டுப்பாட்டுக்கும் எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக அமையும். அராஜகவாதமானது அதிகாரத்துவத்தின் எதிர் துருவமாகும்.

கட்சி நிறுவனத்தில் வெறும் பெயரளவிலான ஜனநாயகம் இருப்பது அதிகாரத்துவ போக்குகளையோ அல்லது அராஜகவாத போக்குகளையோ ஒழிக்காது. ஏனெனில் பெயரளவிலான ஜனநாயகம்தான் அந்தப் போக்குகளுக்கு செழுமையான விளை நிலமாக இருக்கிறது. எனவே பெயரளவிலான ஜனநாயகத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்சி நிறுவனத்தின் மத்தியத்துவம், அதாவது பலமான தலைமையைப் படைக்கும் நோக்கம் வெற்றிகரமாக சாதிக்கப்பட முடியாது. கட்சிக்குள்ளேயே, தலைமை நிறுவனங்களுக்கும் உறுப்பினர்களுக்கு இடையிலேயும்—அதுபோலவே கட்சிக்கு வெளியில் உள்ள திரளான பாட்டாளி வர்க்கத்துக்கும் கட்சிக்கும் இடையிலும் உயிரோட்டமான இணைப்புகளையும் பரஸ்பர உறவுகளையும் வளர்ப்பதும் நிலைநிறுத்துவதும் இதற்கான மிக அவசியமான முன் நிபந்தனைகள் ஆகும்.

## III. பொதுவுடமைவாத நடவடிக்கையின் கடமைகள் பற்றி

**கட்சி உறுப்பினரின் முதல் கடமை**

8. புரட்சிகர மார்க்சிய பயிற்சிப் பள்ளியாக பொதுவுடமைக் கட்சி விளங்க வேண்டும். கட்சி நடவடிக்கைகளில் அன்றாட பொது வேலைகள் வாயிலாக கட்சி நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இடையிலும், கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலும் உயிரோட்டமுள்ள உறவுகள் நிறுவப்படுகின்றன.

கட்சியின் அன்றாட நடவடிக்கைகளில் கட்சி உறுப்பினர்களில் ஆகப்பெரும்பான்மையானவர்கள் பங்கேற்பது சட்டபூர்வமான பொதுவுடமைக் கட்சிகளில் இன்றும் கூடக் குறைவாக உள்ளது. இது இந்தக் கட்சிகளின் தலையாய குறைபாடாகும். அவற்றின் முன்னேற்றத்தில் தொடர்ச்சியான உத்திரவாதமின்மைக்கு அடித்தளமாக இக்குறைபாடு விளங்குகிறது.

9. பொதுவுடமைவாதத்துக்கு மாறும் ஆரம்ப கட்டங்களில் ஒவ்வொரு தொழிலாளர் கட்சியும் பொதுவுடமைவாத வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பது, தனது பிரச்சாரத்தில் பழைய கோட்பாட்டுக்குப் பதில் பொதுவுடமைவாத போதனைகளைக் கடைபிடிப்பது, எதிர் முகாமைச் சேர்ந்த நிர்வாகிகளிடமிருந்து பொதுவுடமைவாத நிர்வாகிகளுக்கு பொறுப்புகளை மாற்றுவது ஆகியவற்றுடன் மனநிறைவு அடையக் கூடிய அபாயம் உள்ளது. பொதுவுடமைவாத வேலைத் திட்டத்தை ஏற்றுக் கொள்வது என்பது பொதுவுடமைவாதியாவதற்கான விருப்பத்தை குறிப்பது மட்டுமேயாகும். பொதுவுடமைவாத நடவடிக்கை இல்லாமலிருந்தால், பரந்து பட்ட கட்சி உறுப்பினர்கள் இன்னமும் செயலின்றி இருந்தால், பொதுவுடமைவாத வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட உறுதிமொழியில் கட்சியானது ஒரு சிறு பகுதியைக் கூட நிறைவு செய்யவில்லை என்றே ஆகும். கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கட்சியின் தொடர்ச்சியான அன்றாட நடவடிக்கைகளில் பங்கேற்பது என்பதே பொதுவுடமைவாத வேலைத் திட்டத்தை நேர்மையாக அமுல்படுத்துவதன் முதல் நிபந்தனை ஆகும்.

பொதுவுடமைவாத நிறுவனக் கலை எதில் அடங்கி இருக்கிறது என்றால் பாட்டாளி வர்க்கம் போராட்டத்திற்காக ஒவ்வொருவரையும் பயன்படுத்திக் கொள்ளும் திறமையில் அடங்கி இருக்கிறது; கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் கட்சி வேலையைப் பகிர்ந்தளிப்பதிலும், அவர்கள் வாயிலாக புரட்சி இயக்கத்தின் பால் மேன்மேலும் பரந்துபட்ட பாட்டாளி வர்க்கத்தினரை ஈர்ப்பதிலும் இருக்கிறது. மேலும் பொதுவுடமைக் கட்சியானது இயக்கம் முழுவதின் திசை வழியை தனது பிடியில் வைத்திருக்க வேண்டும். இதை தனது பலத்தைக் கொண்டல்ல, தனது அதிகாரத்துவத்தின் மூலம் (அளவற்ற) சக்தியின் மூலம் மத்தான அனுபவத்தின் மூலம், பன்முக அறிவாற்றலின் மூலம், திறன்களின் மூலம் செய்தல் வேண்டும்.

10. பொதுவுடமைக் கட்சியானது உண்மையிலேயே செயல் திறனுள்ளவர்களை மட்டுமே கொண்டிருக்க முயல வேண்டும். கட்சியின் தேவைக்குட்பட்டு தனது அணி வரிசையிலுள்ள கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது முழுபலத்தையும் காலத்தையும் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் அவர்களால் முடிந்தவரை கட்சி வேலைகளுக்காக ஒதுக்கி தன்னையே அர்ப்பணிக்க வேண்டும்; தனது மிகச் சிறந்த சக்திகளை கட்சிப் பணிகளுக்காக ஒதுக்க வேண்டும் எனக் கோர வேண்டும்.

பொதுவுடமைக் கட்சியில் உறுப்பினராக இருப்பது என்பது இயல்பாகவே பொதுவுடமைவாத நம்பிக்கைகளுடன் சேர்ந்து முதலில் தேர்வுநிலை உறுப்பினராகவும் பின்னர் உறுப்பினராகவும் அதிகார பூர்வமாக பதிவு செய்வது, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை முறையாகச் செலுத்துவது, கட்சிப் பத்திரிகைகளுக்கு சந்தா செலுத்துவது போன்றவற்றையும் கொண்டதாகும். ஆனால் மிகமிக முக்கியமானது கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் கட்சியின் அன்றாட வேலைகளில் ஈடுபடுவதாகும்.

**ஒவ்வொருவரும் கட்சியின் ஒரு குழுவில் இருப்பது:**

11. கட்சி வேலைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஒரு விதி என்ற முறையில் ஒவ்வொரு உறுப்பினரும் சிறு குழு, கமிட்டி, கமிஷன் பெரிய குழு பிராக்‌ஷன் அல்லது கருக்குழு போன்ற செயல்படும் குழு ஒன்றில் உறுப்பினராக இருக்க வேண்டும். இந்த வழியில் மட்டுமே கட்சி வேலைகளைச் சரியாகப் பகிர்ந்தளிக்க முடியும்; வழிகாட்ட முடியும்; நிறைவேற்ற முடியும்.

உள்ளூர் அமைப்பின் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறவே வேண்டியதில்லை. சட்டபூர்வ சூழ்நிலைகள் நிலவும் போது, குறுப்பிட்ட காலக் கிரமத்தில் நடைபெறும் இக்கூட்டங்களுக்குப் பதிலாக உள்ளூர் பிரதிநிதிகளின் கூட்டத்தை நடத்துவது உசிதமானதல்ல. அனைத்து உறுப்பினர்களும் இந்தக் கூட்டங்களில் முறையாகக் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் இதுமட்டும் போதுமானதல்ல. இந்தக் கூட்டங்களுக்கான தயாரிப்பு என்பதே சிறு குழுக்களாக வேலையை பிரித்து செய்வது அல்லது குறிப்பிட்ட வேலைகளைச் செய்ய சில தோழர்கள் ஒதுக்கப்படுவது என்பதை முன்னனுமானமாகக் கொண்டிருக்கிறது. இவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தியே தொழிலாளர்களின் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மக்கள் திரள் நடவடிக்கைகளுக்கான தயாரிப்புகள் செய்யப்படுகின்றன. இந்நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பலதரப்பட்ட கடமைகளை சிறு குழுக்கள் மட்டுமே எச்சரிக்கையாக ஆய்வதும், ஆழமாக நடைமுறைப்படுத்துவதும் இயலும். உறுப்பினர்கள் அனைவரும் இத்தகைய பல்வேறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அன்றாட வேலைகளை இடையறாது செய்யாவிடில் பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தில் பங்கேற்கும் எத்தகைய தீவிர முயற்சிகளும் இப்போராட்டங்களில் செல்வாக்கு செலுத்தும் முயற்சிகளும் தோல்வியுறும். இவ்வாறே ஒன்றுபட்ட திறன் மிக்க பொதுவுடமைக் கட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் உயிரோட்டமுள்ள புரட்சி சக்திகள் அனைத்தையும் கொண்டு வந்து கெட்டிப்படுத்துவதும் இயலாது.

**ஆலை செல்களின் (FACTORY CELLS) முக்கியத்துவம்:**

12. கட்சி நடவடிக்கைகளின் பல்வேறு கிளைகளில் அன்றாட வேலைகளைச் செய்ய பொதுவுடமைவாத கருக்குழுக்களை அமைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் கிளர்ச்சிகளை நடத்துதல், கட்சி ஆய்வு, செய்திப் பத்திரிக்கை வேலை, கட்சி வெளியீடுகளை வினியோகித்தல், தகவல் சேகரிப்பு, தொடர்ச்சியான பணிகள் இன்னும் இது போன்றவற்றைக் கருக்குழுக்கள் செய்யும்.

பொதுவுடமைக் கட்சிக்கு ஒரு சில உறுப்பினர்கள் அல்லது தேர்வுநிலை உறுப்பினர்கள் உள்ள இடங்களிலெல்லாம் தொழிற்சாலைகள் மற்றும் பணிமனைகளில் உள்ள தொழிற்சங்கங்களில், பாட்டாளி வர்க்க அமைப்புகளில், ராணுவப் பிரிவுகளில், அன்றாடக் கட்சி வேலைகளைச் செய்வதற்கான சிறு குழுக்களே பொதுவுடமை வாதக் கருக்குழுக்களாகும். ஒரே தொழிற்சாலை அல்லது தொழிற்சங்கத்தில் பெரும் எண்ணிக்கையில் கட்சி உறுப்பினர்கள்

இருந்தால், கருக்குழுவானது பிராக்ஷனாக மாற்றப்பட்டு அது சிறு குழுக்களின் வேலைகளை வழிநடத்தும்.

பரந்த் தன்மையுடைய எதிர்தரப்பு. பிராக்ஷனை அமைப்பதோ அல்லது ஏற்கனவே உள்ளதில் பங்கேற்பதோ அவசியமாகும்போது சிறப்புக் கருக்குழுவின் வாயிலாகத் தொழிற்சங்கத் தலைமையைக் கைப்பற்ற அல்லது தலைமை ஏற்க பொதுவுடமையாளர்கள் முயற்சிக்க வேண்டும். தனது சேர்ந்த சுற்றுச் சூழலைப் பொருத்து கருக்குழு வெளிப்படையாக வருவதா. அல்லது பொது மக்கள் மத்தியில் கூட வெளிப்படையாக வருவதா என்பது விசேட சூழ்நிலைகளைக் கணக்கிலெடுத்து அவ்வாறு வருவதன் அபாயங்கள் மற்றும் சாதகங்களை ஆழமாகப் பரிசீலிப்பதைச் சார்ந்திருக்கும்.

13. பொதுக் கடமையான வேலைகளைக் கட்சியில் அறிமுகப் படுத்துவதும், சிறு வேலைக்குழுக்களைக் கட்டியமைப்பதும் மக்கள்திரள் பொதுவுடமைக் கட்சிகளுக்கு (மிகக் குறிப்பாக) கடினமான பணியாகும் இதை எடுத்த எடுப்பிலேயே சாதித்துவிட முடியாது.. இதற்கு சலிப்பற்ற விடாமுயற்சி, முதிர்ச்சி பெற்ற அறிவு, மகத்தான ஆற்றல் ஆகியவை வேண்டும்.

**இந்தப் புதிய வடிவிலான நிறுவனத்தை தவக்கத்தி** லிருந்தே எச்சரிக்கையுடனும் முதிர்ச்சியான அறிவுடனும் கட்டியமைப்பது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் பெயரளவிலான திட்டத்தின்படி கருக்குழுக்களாகவும், சிறுசிறு குழுக்களாகவும் பிரித்து உடனடியாகக் கட்சியின் அன்றாட பொது வேலைகளைச் செய்யுமாறு அவற்றை அறைகூவி அழைப்பது என்பது மிகச் சுலபமான வேலையாகும். ஆனால் இத்தகைய தொடக்கம் என்பது தொடங்காமலிருப்பதைவிட மோசமானது. இந்த மகத்தான கண்டு பிடிப்புகளின்பால் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் மனநிறைவின்மையையும் வெறுப்பையுமே இது தூண்டிவிடும்.

**பொதுவுடமைவாத செல்(Cell)களைக்கட்டியமைப்பது எப்படி?**

உறுதியான நம்பிக்கையும் ஊக்கமும் உடைய பொதுவுடமைவாதிகளான செயல்திறனுள்ள பல அமைப்பாளர்களுடன் கலந்தாலோசித்து— நாட்டின் பல்வேறு மையங்களில் உள்ள இயக்கத்தின் நிலைமையை அறிந்தவர்களைக் கலந்தாலோசித்து இந்தப் புதிய விஷயங்களை அறிமுகப் படுத்துவதற்கான விவரமான அடிப்படைகளை விரிவாக வகுக்க வேண்டும் என்பதை நாம சிபார்சு செய்கிறோம். இதன்பின் பயிற்றுவிக்கப்பட்ட அமைப்பாளர்கள் அல்லது அமைப்புக் கமிட்டிகள், களத்தில் வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். குழுக்களின் முதல்தரமான தலைவர்களைத் தெரிவு செய்து கொண்டு ஆரம்ப வேலைகளைத் துவக்க வேண்டும். அதன்பின் கட்சி நிறுவனங்கள், வேலைக்கான குழுக்கள், கருக்குழுக்கள், தனிப்பட்ட உறுப்பினர்கள் அனைத்துக்கும் பருண்மையான, குறிப்பிட்டு வரையறுக்கப்பட்ட கடமைகள் முன் வைக்கப்பட வேண்டும். இவற்றை முன் வைக்கும்போது அவை அவர்களுக்குப் பயன் உள்ளவையாகவும், விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகவும், அமல்படுத்தக் கூடியவையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அவசியமான இடங்களில் இக்கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை நடைமுறையில் செய்து காட்ட வேண்டும். அப்போது தவிர்க்கப்பட வேண்டிய தவறான நடவடிக்கைகள் பற்றி அவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும் வேண்டும்.

14. இந்த மறு ஒழுங்கமைப்பு வேலைகள் நடைமுறையில் படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டும். ஆரம்பத்தில் எண்ணற்ற கருக்குழுக்கள் அல்லது வேலைக்கான குழுக்களை உள்ளூர் நிறுவனங்களில் அமைக்கக் கூடாது. தனியாகப் பிரிக்கப்பட்ட முக்கியமான தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சங்கங்களில் அமைக்கப்பட்ட சில கருக்குழுக்கள் சரியாக இயங்குவதையும், கட்சி நடவடிக்கைகளின் பல்வேறு கிளைகளில் அவசியமான அளவு தொழிலாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு குறிப்பிடத்தக்க அளவு அவை உறுதிபபடுத்தப்பட்டிருப்பதையும் (எடுத்துக்காட்டாக: தகவல் சேகரிப்பு, தகவல் தொடர்பு, மகளிர் இயக்கம், கிளர்ச்சித் துறை, பத்திரிக்கை வேலை, வேலையின்மை எதிர்ப்பு இயக்கம் போன்றவை) நிரூபணமாக்க வேண்டும் புதிய நிறுவன எந்திரம் குறிப்பிடத்தக்க நடைமுறை அனுபவம் பெறும்வரை பழைய நிறுவனக் கட்டமைப்பு அவசர கோலமாகக் கலைக்கப்படக் கூடாது. அதே வேளையில் கட்சி நிறுவன வேலைகளின் இந்த அடிப்படைக் கடமைகள் ஒவ்வொரு இடத்திலும் மிமிகு ஆற்றலுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இவை சட்டபூர்வமாக இயங்கும் கட்சிகளுக்கு மட்டுமல்லாமல், சட்ட விரோதமாக இயங்கும் கட்சிகளுக்கும் மகத்தான கடமைகளைச் சுமத்துகின்றன.

**பாட்டாளி வர்க்கப் போராட்ட மையங்கள் அனைத்திலும் பொதுவுடமைவாத கருக்குழுக்கள், பிராக்ஷன், தொழிலாளர் குழுக்கள் பரந்துவிரிந்து வலைப்பின்னல் ஆக அமைக்கப்பட்டு இயங்கும் வரையில், கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் அன்றாட புரட்சி வேலையில் தனது பங்கைச் செய்யும் வரையில். இவ்வாறு செய்வது உறுப்பினர்களுக்கு இயல்பானதாகவும் வழமையானதாகவும் ஆகும் வரையில் இக்கடமைகளை நிறைவேற்றுவதில் கடின உழைப்பைச் செலுத்துவதிலிருந்து கட்சியானது ஓய்வாயிருக்க தன்னைத்தானே அனுமதிக்கக்கூடாது.**

**சோதித்தறிவது:**

15. இந்த அடிப்படையான நிறுவனக் கடமையானது கட்சித் தலைமை உறுப்புகளின் மீது ஒரு கடப்பாட்டைச் சுமத்துகின்றது. கட்சி வேலைகளின் மீது முறையான தொடர்ச்சியான செல்வாக்கு செலுத்தும் படியான முறையில் இடையறாது வழிகாட்டுவதும் தனது கட்டுப்பாட்டை செலுத்துவதுமே அக்கடப்பாடு கட்சி நிறுவனங்களின் தலைமையில் இருக்கும் செயலூக்கமிக்கத் தோழர்கள் தமது பங்குக்கு பன்முக செல்வாக்கு செலுத்துவதானது இதற்கு தேவைபபடுகிறது பொதுவுடமைவாத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள், தோழர்கள் பொதுவாக அன்றாட வேலைகளில் ஈடுபடுகிறார்களா எனபதை கண்காணிப்பது மட்டும் போதாது. சிறப்பான சூழ்நிலைகளுக்கு ஏற்றதான குறிப்பிட்ட திசைவழியில் வேலை பற்றிய நடைமுறை அறிவுடன் இத்தகைய பணிகளைச் செய்ய உதவவும், அவற்றை முறைப்படி வழிநடத்தவும் வேண்டும். அனுபவத்தின் அடிப்படையில் தமது சொந்த நடவடிக்கைகளில் இருக்கக்கூடிய தவறுகளைக் கண்டறியவும் வேலை முறைகளை இடையறாது செழுமைப்படுத்தவும் போராட்டத்தின் நோக்கத்தை ஒருகணமும் மறவாதிருக்கவும் அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

**மேலிருந்து அறிவிப்பதும் கீழிருந்து அறிக்கை பெறுவதும்—தலைமையின் மையக் கடமை :**

16. நமது கட்சி வேலைகள் முழுவதும் சித்தாந்த அல்லது நடைமுறை போராட்டங்களாகவோ அல்லது போராட்டத்துக்கான தயாரிப்பு வேலையாகவோ இருக்கின்றன. இதுவரையில் இப்பணியில் தேர்ச்சி என்பது மிகவும் குறைபாடுள்ளதாகவே இருந்து வருகிறது. கட்சி நடவடிக்கைகள் அரிதாகவே இருப்பது என்பது மிக முக்கிய துறைகளில்கூட காணப்படுகின்றன. உதாரணமாக இரகசிய உளவாளிகளை எதிர்ப்பது என்ற விசயத்தில் சட்டபூர்வமாக இயங்கும் கட்சிகள் மிகச்சிறிய அளவு பணிகளையே செய்துள்ளன. நமது கட்சித் தோழர்களுக்கு ஒரு விதி என்ற முறையில் செய்ய வேண்டிய அறிவுறுத்தும் (Instruct) வேலை எப்போதாவது செய்யப்படுகிறது—அல்லது இரண்டாம் பட்சமாக செய்யப்படுவதாக இருக்கிறது. இது எந்த அளவு மேலோட்டமாக செய்யப்படுகிறது என்றால் கட்சியின் தீர்மானங்களும் ஏன் கட்சித் திட்டமும் பொதுவுடமை அகிலத்தின் தீர்மானங்களும்கூட மிகப் பெருமளவில், மிகப் பரவலான பிரிவினரான கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியாமலேயே இருக்கின்றன. மிக உயர்ந்த அளவில் தேர்ச்சி பெறுவதற்காக கட்சி நிறுவன கட்டமைவு முழுவதிலும் கட்சியின் செயல்பாட்டுக் கமிட்டிகள் அனைத்திலும் முறையாகவும், இடையறாதும் அறிவுறுத்தும் வேலை செய்யப்பட்டாக வேண்டும்.

17 (கீழிருந்து) அறிக்கைகள் சமர்ப்பிப்பது என்பதும் பொதுவுடமைவாத நடவடிக்கையின் கடமைகளைச் சேர்ந்ததாகும். இது கட்சியின் அனைத்து நிறுவனங்கள் மற்றும் உறுப்புகளின், இதுபோலவே ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரின் கடமையாகும். குறுகிய காலத்துக்கான பொது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கட்சியின் விசேடமான கமிட்டிகளின் வேலைகளைப் பற்றி விசேடமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முறையாகவும் தொடர்ச்சியாகவும் அறிக்கை சமர்ப்பிப்பது என்பதை எந்த அளவு அவசியமானதாக செய்ய வேண்டும் என்றால், இது ஒரு நிரந்தரமாக நிறுவப்பட்ட வழிமுறை என்ற அளவுக்கு, பொதுவுடமை இயக்கத்தின் மிகச் சிறந்த பாரம்பரியம் என்ற அளவுக்கு செய்ய வேண்டும்.

**ஒவ்வொரு நிறுவனமும் தனது மேல்மட்ட கமிட்டிக்கு வேலை அறிக்கை சமர்ப்பிப்பது :**

18. ஒவ்வொரு கட்சியும் தனது காலாண்டு வேலை அறிக்கையை, பொதுவுடைமை அகிலத்தின் தலைமை உறுப்புக்குத் தருதல் வேண்டும். கட்சி நிறுவனம் ஒவ்வொன்றும் தனக்கு அடுத்த மேல் கமிட்டிக்கு (எடுத்துக்காட்டாக) பகுதி அடிப்படையிலான ஒவ்வொரு கிளையும் தனக்கு மேலான கட்சிக் கமிட்டிக்கு மாதாந்திர வேலை அறிக்கையை அளிக்க வேண்டும்.

ஒவ்வொரு கட்சிக் கருக் குழுவும், பிராக்ஷனும், தொழிலாளர் குழுவும் எந்தக் கட்சி உறுப்பின் பொறுப்பில் இருக்கின்றனவோ அவற்றுக்குத் தமது அறிக்கையை அனுப்புதல் வேண்டும். தனி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாம் அங்கம் வகிக்கும் கருக்குழு அல்லது தொழிலாளர் குழுவுக்கு (முறையே அவற்றின் தலைவருக்கு) அறிக்கை அளிக்க வேண்டும். இது போலவே குறிப்பிட்ட விசேட பொறுப்பை நிறைவேற்றியது பற்றி, எந்தக் கட்சி உறுப்பு அந்த வேலையை ஒப்படைத்ததோ அதற்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

இந்த அறிக்கையானது எப்போதும் சாத்தியப்பட்ட அளவு முதல் சந்தர்ப்பத்திலேயே அளிக்கப்பட வேண்டும். வேலையைச் செய்யுமாறு பணித்த கட்சி உறுப்பு அல்லது தோழர் எழுத்துப் பூர்வமான அறிக்கை வேண்டுமெனக் கோரினால் ஒழிய அறிக்கை வாய்மூலமாகவே இருக்க வேண்டும். அறிக்கைகள் குறிப்பாகவும் விசயத்தை விட்டு விலகாமலும் இருக்க வேண்டும். வெளியிடப்படக் கூடாத அறிக்கைகளைப் பத்திரமாக வைத்திருக்கவும், முக்கியமான அறிக்கைகளைக் காலதாமதமின்றி சம்பந்தப்பட்ட கட்சி அங்கங்களுக்கு அனுப்புவதும் அறிக்கைகளைப் பெறுபவரின் பொறுப்பாகும்.

**வேலை அறிக்கை எவ்வாறு இருக்க வேண்டும்?**

19. இந்த அறிக்கைகள் அனைத்தும் இயல்பாகவே, அறிக்கை அளிப்பவரின் வேலைகளைப் பற்றிய விவரங்களுடன் வரம்பிட்டுக் கொள்பவையாக இருக்க வேண்டும். நமது வேலையின் போது கவனத்துக்கு வந்த, நமது எதிர்கால போராட்டத்துக்கு குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் உடைய விசேட சூழ்நிலைகள், நமது எதிர்கால வேலைகளில் மாற்றம் அல்லது முன்னேற்றத்தைக் கொண்டுவரத்தக்கதான குறிப்பான பரிசீலனைகள், வேலையை நிறைவேற்றும்போது உணரப்பட்ட முன்னேற்றத்துக்கான ஆலோசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தாக இவை அனைத்தும் பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாக அறிக்கைகள் இருக்க வேண்டும்.

பொதுவுடைமைவாத கருக்குழுக்கள், பிராக்ஷன், தொழிலாளர் குழுக்கள் அனைத்திலும் எல்லா வேலை அறிக்கைகளும்—அவை பெறுகின்றவையும், அதுபோலவே அவை அனுப்புபவையும்—முற்று முழுதாக விவாதிக்கப்படவேண்டும். இத்தகைய விவாதங்களை நடத்துவது ஒரு முறையான பழக்கமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான நிறுவனங்களின், குறிப்பாக குட்டி முதலாளித்துவ தொழிலாளர் நிறுவனங்களின் அதிலும் முக்கியமாக 'சோசலிஸ்டு' கட்சிகளின் நடவடிக்கைகள் பற்றி கண்காணிப்பதையும் அவை பற்றி அறிக்கை செய்வதையும் கருக்குழுக்களிலும் தொழிலாளர் குழுக்களிலும் உள்ள தனிப்பட்ட கட்சி உறுப்பினர்களும் அல்லது குழுவாக உள்ள கட்சி உறுப்பினர்களும் கவனமாக செய்ய வேண்டும்.

## IV. பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி பற்றி

**நம்முடைய பிரச்சாரம் புரட்சிகரமானது :**

20. புரட்சிகரமான பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சியை நடத்துவது என்பது வெளிப்படையான புரட்சிப் போராட்டம் நடத்தும் நமது கடமையில் தலையாயதாகும். இந்த வேலையும், இதை நடத்துவதற்கான நிறுவனங்களும் இன்னமும், பிரதானமாக, சம்பிரதாயமான முறைகளிலேயே நடத்தப்படுகின்றன. எப்போதாவது நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பேசுவதுடனேயே இருக்கிறது. உரைகள் மற்றும் கட்டுரைகளின் பருண்மையான புரட்சிகர உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தப்படாமல் உள்ளது.

தொழிலாளர்களின் பொதுநலன்களிலிருந்தும், விழைவுகளிலிருந்தும் குறிப்பாக அவர்களது ஒன்றுபட்ட போராட்டங்களிலிருந்தும், அவர்கள் மத்தியிலிருந்தே பொதுவுடைமைப் பிரச்சாரமும் கிளர்ச்சியும் வேர் விட்டிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுவுடைமைவாதப் பிரச்சாரம் புரட்சிகரத் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்பது நினைவில் கொள்ள வேண்டிய அதிமுக்கியமான விஷயம். பருண்மையான பிரச்சினைகளின்பாலான பொதுவுடைமைவாதக் கண்ணோட்டமும், அதற்குரிய பொதுவுடைமைவாதப் போராட்ட அறைகூவல்களும் (முழக்கங்களும்) நமது சிறப்பான கவனத்தையும் அக்கறையையும் பெறவேண்டும்.

இந்தச் சரியான போக்கை உத்திரவாதப்படுத்திக் கொள்ள, பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சியையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு மட்டுமின்றி, அனைத்துக்கட்சி உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்துவதற்குக், கவனம் செலுத்த வேண்டும்.

**பிரச்சாரம் மற்றும் முழக்கங்களின் வடிவங்கள் :**

21. பொதுவுடைமைவாதப் பிரச்சாரங்களின் தலையாய வடிவங்கள் பின்வருமாறு : (அ) தனிப்பட்ட வாய்வழிப் பிரச்சாரம் (ஆ) தொழிலாளர்களின் தொழிற்சங்க மற்றும் அரசியல் இயக்கத்தில் பங்கு பெறுவது (இ) கட்சிப் பத்திரிக்கை மற்றும் கட்சி வெளியீடுகளை விநியோகிப்பது ஆகியவைகளின் வாயிலாக நடத்தும் பிரச்சாரம். சட்டபூர்வமான மற்றும் சட்டவிரோதமான கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் இப்பிரச்சார வடிவங்கள் ஏதாவதொன்றில் முறையாகப் பங்கேற்க வேண்டும்.

தனிப்பட்ட வாய்வழிப் பிரச்சாரம் என்பது விசேடமான தொழிலாளர் குழுக்கள் வீடு வீடாகச் சென்று முறையாகவும், தொடர்ச்சியாகவும் பிரச்சாரம் செய்வது என்ற வடிவத்தை மேற்கொள்ள வேண்டும். கட்சி செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியில் ஒரு வீட்டைக்கூட விட்டுவிடாமல் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். பெருநகரங்களில் சுவரொட்டிகள் மற்றும் பிரசுரங்கள் வினியோகிப்பது என்ற ஒழுங்கமைக்கப்பட்ட வெளிப்பிரச்சார இயக்கம் மனநிறைவு அளிக்கக்கூடிய விளைவுகளை வழக்கமாக ஏற்படுத்தும். இத்துடன் தொழில் நிலையங்களில் பிராக்ஷன்கள் நேரடியான கிளர்ச்சிகளை முறையாக நடத்தவேண்டும். இதைத் தொடர்ந்து கட்சி வெளியீடுகளை தொழில் நிலையங்களில் விநியோகிக்க வேண்டும்.

தேசிய சிறுபான்மையினர் வாழும் நாடுகளில் இந்தத் தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கப் பிரிவினரிடையில் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சியை நடத்துவதற்குத் தேவையான கவனத்தைச் செலுத்துவது கட்சியின் கடமையாகும். கட்சியின் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி அந்தந்த சிறுபான்மை மொழிகளில்தான் நடத்தப்பட வேண்டும் இந்த நோக்கத்திற்காக அவசியமான விசேட பத்திரிக்கைகளைக் கட்சி உருவாக்க வேண்டும்.

22. பெரும்பான்மையான பாட்டாளி வர்க்கத்தினர் இன்னும் புரட்சிகர உணர்வை அடையாத நிலையில் உள்ள முதலாளித்துவ நாடுகளில், இத்தகைய பின்தங்கிய தொழிலாளர்களை புரட்சிகர அணிவரிசைக்குக் கொண்டு வரும் வகையிலான புதுப்புதுப் பிரச்சார வடிவங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முறையில் பொதுவுடைமைவாதக் கிளர்ச்சி அமையவேண்டும். முதலாளித்துவக் கருத்துகோள்கள் மற்றும் மரபுகளுக்கு எதிராக தொழிலாளர் மனங்களில் உணர்வு பூர்வமற்ற முறையில் முளைவிட்டுக் கொண்டிருக்கின்ற அரைகுறையான, ஊசலாட்டமான, அரை முதலாளித்துவத்தன்மையுடைய புரட்சிகரப் போக்குகள் மேலோங்குவதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. பொதுவுடைமைவாதப் பிரச்சாரமானது, திரும்பத் திரும்பப் பிரபலப்படுத்தப்படும் தனக்கே உரித்தான சொற்றொடர்கள் அறைகூவல்களுடன் (முழக்கங்கள்) இப்போக்குகளை வெளிக் கொணரச் செய்யவேண்டும்.

அதே வேளையில் பாட்டாளி வர்க்கத் திரளினரின் வரம்புக்கு உட்பட்ட மற்றும் குழப்பமான கோரிக்கைகள் அல்லது விருப்பங்களுடன் பொதுவுடைமைவாதப் பிரச்சாரம் மனநிறைவு பெற்று ஓய்ந்துவிடக்கூடாது. இந்தக் கோரிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் புரட்சிக்கருத்துக்களின் நுண்ணுயிர்களைக் கொண்டிருக்கின்றன. இவை பாட்டாளி வர்க்கத்தைப் பொதுவுடைமை வாதப்பிரச்சாரத்தின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதற்கான சாதனங்களாகும்.

**தொழிலாளர் வர்க்கத்தின் அன்றாடப் போராட்டங்களுக்குத் தலைமையேற்பது**

23. பொதுவுடைமைவாத நிறுவனங்கள் தமது சொந்த தொழிலாளர் இயக்கத்தின் வீரமிக்க, அறிவுக் கூர்மைமிக்க,

www.padippakam.com

பேராற்றல் மிக்க, எப்போதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைமை என்ற தோற்றத்தை அளிக்கத்தக்க முறையில் பாட்டாளி வர்க்கத் திரளினரிடையே பொதுவுடமைவாத கிளர்ச்சி நடத்தப்படவேண்டும்.

இந்த நோக்கத்தில், பொதுவுடமையாளர்கள் தொழிலாளர்களின் ஆரம்ப நிலையிலுள்ள போராட்டங்கள் மற்றும் இயக்கங்கள் அனைத்திலும் பங்கேற்க வேண்டும். வேலை நேரம், வேலை நிலைமைகள், கூலி இன்னும் இது போன்ற பிரச்சினைகளில் முதலாளிகளுடனான மோதலில் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தினுடையபருண்மையானவாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றியும் பொதுவுடமையாளர்கள் பெரும் கவனம் செலுத்த வேண்டும். இப்பிரச்சினைகளின் மீது சரியான புரிதலுக்கு வர தொழிலாளர்களுக்கு பொதுவுடமையாளர்கள் உதவ வேண்டும். மிகமிகக் கொடிய அத்துமீறல்களின்பால் தொழிலாளர்களின் கவனத்தை ஈர்ப்பதையும் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை நடைமுறை ரீதியிலும், தெளிவான வடிவிலும் உருவாக்க உதவுவதையும் பொதுவுடமையாளர்கள் செய்ய வேண்டும். இந்த வழியில் பொதுவுடமையாளர்கள் தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வை விழித்தெழச் செய்ய முடியும்; ஒரு ஒன்றுபட்ட வர்க்கம்—இது உலகப் பாட்டாளி வர்க்கப் படைவரிசையின் ஒரு பிரிவே—என்ற ரீதியில் நாட்டில் உள்ள தொழிலாளர்கள் அனைவரிடமும் சமுதாய நலன்கள் பற்றிய உணர்வை ஏற்படுத்த முடியும்.

இத்தகைய அடிப்படையான கடமைகளை அன்றாடம் நிறைவேற்றுவது பாட்டாளி வர்க்கத்தின் அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்பது ஆகியவற்றின் வாயிலாக பொதுவுடமைக் கட்சியானது உண்மையான பொதுவுடமை கட்சியாக உருவாக முடியும். இத்தகைய முறைகளை மேற்கொள்வதன் மூலமாகவே பொதுவுடமைக் கட்சி பிரச்சாரத்தை பாமரத்தனமான பிரச்சாரகர்களிடமிருந்து, தூய சோசலிஸ்டு பிரச்சாரம் என்று சொல்லப்படுவதிலிருந்து—புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது, சீர்திருத்தங்கள் பற்றியும், நாடாளுமன்ற சாத்தியப்பாடுகள் அல்லது சாத்தியப்பாடின்மைகள் பற்றிப் பேசுவது ஆகியவற்றைக் கொண்டது இது— வேறுபடுத்திப் பார்க்க முடியும். சுரண்டுபவர்களுடனான சுரண்டப்படுவோரின் அன்றாடப் போராட்டங்கள் மற்றும் பல வடிவங்களிலான மோதல்களில் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சுயதியாக அர்ப்பணிப்புடனும், உணர்வுபூர்வமாகவும் பங்கேற்பது என்பது பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு மட்டுமின்றி மேலும் கூடுதலான அளவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அத்தியாவசியமானதாகும். முதலாளித்துவத்தின் தாக்குதல்களுக்கு எதிரான சிறு போர்களில் தொழிலாளி வர்க்கத்தை வழிநடத்துவதன் வாயிலாகவே பொதுவுடமைக் கட்சி தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படையாக வளர முடியும்; முதலாளித்துவவர்க்கத்தின் மீது மேல் நிலையை அடைவ

பொ—2

தற்கான போராட்டத்தில் முறையான தலைமை அளிப்பதற்கான திராணி உடையதாக வளர முடியும்.

**ஒவ்வொரு போராட்டத்திலும் முன்வரிசையில் நிற்பது:**

24. தொழிலாளர் இயக்கத்தில் பங்கேற்க, வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், தொழிலாளர்கள் மொத்தமாக வெளியேற்றப்படுவது போன்ற விசேடமான காலங்களில் பொதுவுடமையாளர்கள் தமது முழு சக்தியையும் அணி திரட்டிட வேண்டும்.

கட்சியின் வேலைத் திட்டத்தை; ஏன் இறுதி நோக்கங்களை அடைவதற்கான புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தேவையை காரணம் காட்டி தொழிலாளர்களின் வேலை நிலைமைகளில் சிறு முன்னேற்றங்களைக் கொண்டு வருவதற்கான இப்போதைய போராட்டங்களை பொதுவுடமையாளர்கள் வெறுத்தொதுக்குவதும் இத்தகைப் போராட்டங்களின் பால் ஊக்கமற்ற போக்கைக் கடைப்பிடிப்பதும் மிகப்பெரிய தவறாகும். தொழிலாளர்களின் கோரிக்கைகள் எவ்வளவுதான் சிறு அளவிலானதாகவும்; சாதாரணமானதாகவும் இருந்தாலும் இன்று தொழிலாளர்கள் முதலாளிக்கு எதிராகபோராடத் தயாராக முன்வரும் பட்சத்தில் அந்தப் போராட்டத்தில் பங்கேற்காமல் இருப்பதற்கான நொண்டிச் சாக்காக கோரிக்கைகளின் சிறு அளவிலான தன்மையை பொதுவுடமையாளர்கள் காட்டக் கூடாது. முட்டாள் தனமான வேலை நிறுத்தங்கள் மற்றும் பரிசீலனையற்ற நடவடிக்கைகளுக்காக தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிறோம்; வெறியூட்டுகிறோம் என்ற குற்றச்சாட்டு வரும்படியானதாக நமது கிளர்ச்சி வேலைகள் இருக்கக்கூடாது. மக்களுடைய போராட்டங்களில் வீரத்துடனும் துடிப்புடனும் பங்கேற்பவர்கள் பொதுவுடைமையாளர்கள் என்ற பெயரை போராடும் மக்களிடையே ஈட்ட பொதுவுடமையாளர்கள் திடசித்தத்துடன் முயல வேண்டும்.

**பகுதி கோரிக்கைகளுக்கான போராட்டங்களைத் தொடுக்கக் கற்பது:**

25. தொழிற்சங்க இயக்கத்தில் உள்ள பொதுவுடமைவாத செல்கள் (அல்லது பிராக்ஷன்கள்) அன்றாட வாழ்க்கையில் எழக்கூடிய சில சாதாரணமான பிரச்சனைகளை நடைமுறையில் எதிர்கொள்ள இயலாதவை என்று தம்மைக் காட்டிக் கொண்டுள்ளன. பொதுவுடமையின் பொதுக் கோட்பாடுகளை போதித்துக் கொண்டே இருப்பது எளிமையானது. ஆனால் பயனற்றது. ஏனெனில் பருண்மையான பிரச்சனைகளை எதிர் கொள்ளுகையில் எதிர்மறை போக்கான சர்வசாதாரணமான சிண்டிகலிசத்தில் வீழ்வதில்போய் இது முடியும். இத்தகைய நடைமுறைகள் ஆம்ஸ்டர்டாம் மஞ்சள் அகிலத்தின் வலையில் வீழ்வதாகும்.

மாறாக, பொதுவுடமையாளர்கள் தமது நடவடிக்கைகளில், பிரச்சினையின் ஒவ்வொரு அம்சத்தையும் எச்சரிக்கையாக பரிசீலிக்குமாறு வழிநடத்தப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக தத்துவார்த்த ரீதியில் மற்றும் கோட்பாடுகளின் மீது வேலை சம்பந்தமான ஒப்பந்தங்களையும் (கூலிகள் மற்றும் வேலை நிலைமைகள் பற்றி) எதிர்ப்பதுடன் பொதுவுடமையாளர்கள் மனநிறைவு அடைந்து விடுவதற்குப் பதிலாக ஆம்ஸ்டர்டாம் தலைவர்களால் சிபாரிசு செய்யப்படும் கூலி ஒப்பந்தங்களின் குறிப்பான இயல்புக்கு எதிரான போராட்டத்தில் தலைமை ஏற்று நடத்த வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர தயாரிப்புக்கு ஊறு விளைவிக்கும் விஷயங்கள் எதையும் எதிர்க்க வேண்டும் என்பது உண்மையே. எல்லாவகை நடைமுறை ஒப்பந்தங்களின் மூலமாகவும் முதலாளிகளும் ஆம்ஸ்டர்டாம் கேடுகெட்ட ஆமாம் சாமிகளும் தொழிலாளர்களின் கைகளைக் கட்டிப் போடுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது பட்டவர்த்தனமான உண்மையாகும். எனவே இந்த நோக்கங்களின் இயல்பு பற்றி தொழிலாளர்களின் கண்களைத் திறக்கச் செய்வது பொதுவுடமையாளர்களின் கட்டாயக் கடமையாகும். தொழிலாளர்களை விலங்கிடாத ஒப்பந்தங்களுக்காக வாதிடுவதன் மூலம் இந்நோக்கத்தை பொதுவுடமையாளர்கள் மிகச் சிறப்பாக அடைய முடியும்.

தொழிற்சங்க நிறுவனங்களுடைய வேலையின்மை, சுகவீனம் மற்றும் பிற நன்மைகளுக்கும் இதுவே பொருந்தும். போராட்ட நிதிகளை உருவாக்குவது, வேலை நிறுத்தக் காலத்துக்கு சம்பளம் வேண்டும் எனக் கோருவது ஆகிய நடவடிக்கைகள் நாம் சிபாரிசு செய்யக் கூடியது.

எனவே கோட்பாட்டு ரீதியில் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்ப்பது உசிதமானது அல்ல. ஆனால் ஆம்ஸ்டர்டாம் தலைவர்கள் கூறுகின்ற முறையில் இந்த நிதிகளைச் சேகரிப்பதும் உபயோகிப்பதும் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்கு எதிரானது என்பதை பொதுவுடமையாளர்கள் தொழிலாளர்களுக்கு சுட்டிக் காட்ட வேண்டும். நோயுற்றோர் நலநிதி போன்றவை சம்மந்தப்பட்டவரை பொதுவுடமையாளர்கள் தொழிலாளர்களிடமிருந்து நிதி கோரும் முறையை ஒழிக்க வேண்டும். எல்லாவகையான தாமாக முன்வந்து தரும் நிதிகள் தொடர்பாக கட்டாயப்படுத்தும் நிபந்தனைகளையும்ஒழிக்க வேண்டும்என்று வற்புறுத்த வேண்டும். (அரசும் முதலாளிகளும் இவற்றுக்கான நிதியைத் தர வேண்டும் என்று கோர வேண்டும். —மொ—ர்.) கட்டணங்கள் செலுத்துவதன் மூலம் நோயுற்றோர் நலநிதி பெறுவதற்கு சில தொழிற்சங்க உறுப்பினர்கள் இன்னமும்ஆர்வம்காட்டுவார்களேயானால், அவர்கள் நம்மைப் புரிந்துகொள்ளாமல் போய்விடுவார்களோ என்று அஞ்சி வெறுமனே அவற்றைத்தடை செய்வது நமக்குப் பலனளிக்காது. தீவிரமான நேரடியான பிரச்சாரத்தின் மூலம் அத்தகைய தொழிலாளர்களை அவர்களது குட்டி முதலாளித்துவ கருத்தோட்டங்களிலிருந்து வென்றெடுப்பது அவசியமாக இருக்கும்.

**சீர்திருத்தவாதத் தலைவர்களை பருண்மையாக அம்பலப்படுத்துவது:**

26. சமூக ஜனநாயகவாத மற்றும் குட்டி முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், இது

போலவே பல்வேறு வகையான தொழிலாளர் கட்சிகளின் தலைவர்களுக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளர்களுக்கு வெறுமனே எடுத்துக் கூறுவதன் மூலம் அதிகமாக சாதித்துவிட முடியும் என்று நம்ப முடியாது.

இவர்களுக்கு எதிரான போராட்டம் மிகமிக ஆற்றல் மிக்க வகையில் நடத்தப்பட வேண்டும். அவர்களைப் பின்பற்றக் கூடியவர்களை இல்லாமல் செய்வது, முதலாளித்துவத்தின் தாளத்துக்கு ஆடும், துரோகத்தனமான சோசலிஸ்டு தலைவர்களின் உண்மைச் சொரூபத்தை தொழிலாளர்களுக்குக் காட்டுவது இதற்கு மிகச் சிறந்த வழியாகும். தலைவர்கள் என்று கூறப்படும் இவர்களின் முகமூடியைக் கிழித்தெறிவதற்கும் அதற்கடுத்த மிகவும் ஆற்றலுள்ள பாணியில் அவர்களைத்தாக்கிவீழ்த்துவதற்கும்பொதுவுடமையாளர்கள் முயற்சிக்க வேண்டும்.

ஆம்ஸ்டர்டாம் தலைவர்களை[சீர்திருத்தவாத தொழிற் சங்க தலைவர்களை] மஞ்சள் தலைவர்கள் என்று கூறுவது மட்டும் போதாது தொடர்ச்சியான மற்றும் நடைமுறை ரீதியிலான விளக்கங்களுடன் அவர்களது துரோகத் தன்மை நிரூபிக்கப்பட வேண்டும். தொழிற்சங்கங்களில் அவர்களது நடவடிக்கைகள், உலக நாடுகளின் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பில் அவர்களது நடவடிக்கைகள், முதலாளித்துவ அமைச்சரவைகள் மற்றும் நிர்வாகத்தில் அவர்களது நடவடிக்கைகள். மாநாடுகள் மற்றும் நாடாளுமன்றங்களில் அவர்கள் ஆற்றும் துரோகத்தனமான உரைகள், அவர்களது எழுத்துப்பூர்வமான அறிவிப்புகள் மற்றும் பத்திரிக்கைகளால் உள்ள ஆலோசனைகள் எல்லாவற்றுக்கும் மேலாக அனைத்துப் போராட்டங்களிலும் ஏன் மிகக் குறைவான கூலி உயர்வுக்கான போராட்டங்களிலும் வெளிப்படும் அவர்களது ஊசலாட்டம் மற்றும் தயக்கம் — இவை அனைத்தும் எளிய உரைகளிலும் தீர்மானங்களிலும் ஆம்ஸ்டர்டாம் தலைவர்களின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்துவதற்கு இடையறாத வாய்ப்புகளை அளித்துக் கொண்டிருக்கின்றன.

பிராக்ஷன்கள் தங்களது நடைமுறை முன்னணி இயக்கத்தை திட்டமிட்ட பாணியில் நடத்த வேண்டும். கீழ்மட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் காட்டும் அற்ப சமாதானங்களை பொதுவுடமையாளர்கள் ஏற்கக் கூடாது. அவர்கள் என்னதான் நல்லெண்ணம் கொண்டிருந்தாலும் தங்களது பலவீனம் காரணமாக சட்டங்கள், தொழிற்சங்க முடிவுகள், மேல் மட்ட தொழிற்சங்க நிர்வாகிகளின் கட்டளைகள் ஆகியவற்றின் பின்னால் அடிக்கடி நின்றுகொண்டு தொழிலாளர்கள் முன்னோக்கிச் செல்வதை தடுக்கிறார்கள். மாறாக தொழிலாளர்களது வழியில் அதிகாரத்துவ எந்திரத்தால் வைக்கப்படுகிற உண்மையான அல்லது கற்பனையான தடைகளை நீக்கும் விசயத்தில் தங்களுக்கு திருப்தி ஏற்படும் வரை பொதுவுடமைவாதிகள் கீழ்மட்ட தொழிற் சங்க நிர்வாகிகளை வற்புறுத்த வேண்டும்.

**பிராக்ஷன்கள் எவ்வாறு வேலை செய்ய வேண்டும்?**

27. தொழிற்சங்க நிறுவனங்களின் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் பொதுவுடமையாளர்கள் பங்கேற்க எச்சரிக்கையான தயாரிப்புகளை பிராக்ஷன்கள் செய்ய வேண்டும். எடுத்துக் காட்டாக அவைகள் தாங்கள் வைக்கப் போகும் முன் மொழிதல்களை அலசி ஆராய வேண்டும்! பேச்சாளர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்ய வேண்டும். திறமையான, அனுபவமிக்க செயல்திறனுள்ள தோழர்களை (தொழிற் சங்க) வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும்.

தமது பிராக்ஷன்கள் வாயிலாக பொதுவுடமை நிறுவனங்கள் அனைத்துத் தொழிலாளர்களின் கூட்டங்கள், தேர்தல் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், அரசியல் விழாக்கள் இன்னும் இது போன்று, பொதுவுடமைவாத விரோத நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் எச்சரிக்கையான தயாரிப்புகளைச் செய்ய வேண்டும். பொதுவுடமையாளர்கள் தமது சொந்த தொழிலாளர் கூட்டங்களைக் கூட்டும் போதெல்லாம் கூட்டத்தினரிடையே போதுமான அளவு பொதுவுடமையாளர்களின் குழுக்கள் விரவி இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பிரச்சாரத்தில் மனநிறைவு தரும்படியான விளைவுகளை உத்திரவாதப்படுத்திக் கொள்வதற்கான தயாரிப்புகள் அனைத்தையும் அவர்கள் செய்ய வேண்டும்.

**தொழிலாளர் நிறுவனங்கள் அனைத்திலும் வேலை செய்வது:**

28. நிறுவனமாக்கப்படாத மற்றும் பின்தங்கிய தொழிலாளர்களை, நிரந்தரமாக கட்சியின் அணிவரிசைகளில் ஈர்ப்பதற்கும் பொதுவுடமையாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நமது பிராக்ஷன்களின் உதவியோடு தொழிலாளர்களை தொழிற் சங்கங்களில் சேர்க்கவும் நமது கட்சிப் பத்திரிக்கைகளைப் படிக்கவும் தூண்ட வேண்டும். பிற நிறுவனங்களை — கல்விக் கழகங்கள், ஆய்வு வட்டங்கள், விளையாட்டு மன்றங்கள், நாடக மன்றங்கள், கூட்டுறவு சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், யுத்தத்தில் பாதிக்கப்பட்டோர் அமைப்புகள் இன்னும் இது போன்றவை—நமக்கும் தொழிலாளர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் நிறுவனங்களாக பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவுடமைக் கட்சி சட்ட விரோதமாக வேலை செய்யும் இடங்களில் கட்சி உறுப்பினர்களின் முன் முயற்சியால் தலைமைக் கட்சி உறுப்புகளின் ஒத்துழைப்போடும் அவற்றின் கட்டுப்பாட்டிலும் இத்தகைய தொழிலாளர் கழகங்களை (ஆதரவாளர்கள் தலைமையிலான சங்கங்களை) அமைக்கலாம்.

அரசியலில் அக்கறை காட்டாத பாட்டாளி வர்க்கத்தினரின் நலன்களை தட்டி எழுப்பவும் பின்னர் அவர்களை கட்சியில் ஈர்க்கவும் பொதுவுடமைவாத இளைஞர் மற்றும் மகளிர் நிறுவனங்களும் உதவுவதாக இருக்கலாம். கல்வி வகுப்புகள், வாசகர் வட்டங்கள், சுற்றுலாக்கள், விழாக்கள், ஞாயிறு உலாக்கள் இன்னும் இதுபோன்றவை மூலமாகவும், பிரசுரங்கள் விநியோகிப்பது, கட்சிக் பத்திரிக்கையின் எண்ணிக்கையை அதிகரிப்பது இன்னும் இது போன்றவை மூலகாகவும் பின்தங்கியவர்களை ஈர்க்க முடியும். பொது இயக்கத்தில் பங்கேற்பதன் வாயிலாக தொழிலாளர்கள் தம்மைத் தாமே தமது சிறு முதாளித்துவ சார்பிலிருந்து விடுவித்துக் கொள்வர்.

**குட்டி முதலாளித்துவ பிரிவினரை வென்றெடுப்பது:**

29. தொழிலாளர்களில் அரைப்பாட்டாளி வர்க்கப் பிரிவினரை புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின்பாலான ஆதரவாளர்களாக வென்றெடுக்க, அவர்களுக்கு நிலவுடமையாளர்களுடனும் முதலாளிகளுடனும், முதலாளித்துவ அரசுடனும் உள்ள விசேடமான முரண்பாட்டைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்; இந்த இடைப்பட்ட குழுக்கள் பாட்டாளி வர்க்கத்தின் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையைப் போக்கி வென்றெடுக்க இது அவசியம். இதற்கு அவர்களுடன் நீண்டகால பேச்சுவார்த்தைகள் அல்லது அவர்களது தேவைகளின்பால் அறிவுபூர்வமான ஆதரவளிப்பது, அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படும்போது உதவியும் ஆலோசனையும் வழங்குவது, அவர்களது கல்வியை முன்னேற்ற வாய்ப்புகள் அளிப்பது, இன்னும் இது போன்றவை இதற்கு அவசியமாகலாம். இவையனைத்தும் பொதுவுடமை இயக்கத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும். நமக்கு எதிரான இயக்கங்களின் நச்சு செல்வாக்கை எதிர்க்கவும் பொதுவுடமையாளர்கள் முயல வேண்டும். அவை சில மாவட்டங்களில் பலமான செல்வாக்கு செலுத்துபவையாக அல்லது குட்டி முதலாளித்துவ உழைக்கும் விவசாயிகளிடையே செல்வாக்கு உடையவையாக இருக்கலாம்; இவை குடிசைத் தொழில்களில் வேலை செய்வோர் மற்றும் பிற அரைப்பாட்டாளி வர்க்கங்களிடையே செல்வாக்கு செலுத்தலாம். சுரண்டப்படுபவர் தமது சொந்த கசப்பான படிப்பினைகளிலிருந்து இந்த நிறுவனங்கள் கொடூரமான முதலாளித்துவ கட்டமைவின் பிரதிநிதிகள் என்பதையும் அதன் மொத்த உருவங்கள் என்பதையும் அறியும்படியாக அவற்றின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டும். பொதுவுடமைவாத கிளர்ச்சியின் போக்கில் ஜனநாயகம் மற்றும் நீதித்துறை பற்றிய குட்டி முதலாளித்துவ கற்பனைகளுடன் அரசு அதிகார வர்க்கம் மோதுகின்ற அன்றாட நிகழ்ச்சிகள் அனைத்தையும் மதிநுட்பமான மற்றும் ஆற்றல்மிக்க முறையில் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாட்டுப்புற கட்சி நிறுவனமும் தமது மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களிலும், பண்ணை குடியிருப்புகளிலும் - தொலைதூரக் குடியிருப்புகளிலும் பொதுவுடமைப் பிரச்சாரத்தை எடுத்துச் செல்வதற்காக வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யும் வேலைகளை தனது உறுப்பினர்களுக்குள் கவனமாக பகிர்ந்தளிக்க வேண்டும்.

**இராணுவத்தினரிடையே வேலை செய்வது :**

30. தரைப்படை மற்றும் கப்பல் படையினரின் மத்தியிலான பிரச்சாரமுறைகள் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சிறப்பான நிலைமைகளுக்கு பொருந்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். சாந்தப்படுத்தும் இயல்புடைய இராணுவ எதிர்ப்புக் கிளர்ச்சி மிகமிக கேடு விளைவிக்கக் கூடியதும், பாட்டாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்கும் முதலாளித்துவ வர்க்கத்தினரின் முயற்சிகளுக்கு உதவக்

கூடியதுமாகும். முதலாளித்துவ அரசு எந்திரத்தின் எவ்வகையான இராணுவ நிறுவனங்களையும் பொதுவாக முதலாளித்துவ வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கம் கோட்பாடு அடிப்படையில் நிராகரிக்கிறது; தனது சக்தி அனைத்தையும் கொண்டு எதிர்த்துப் போரிடுகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் வரக்கூடிய புரட்சிப் போர்களுக்கு தொழிலாளர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக இந்த நிறுவனங்கள் (இராணுவம், துப்பாக்கி சுட பயிற்றுவிக்கும் கிளப்புகள், குடிமக்கள் பாதுகாப்பு நிறுவனம் இன்ன பிற) அனைத்தையும் பாட்டாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்கிறது. எனவே இளைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு எதிராக தீவிரமான கிளர்ச்சிகள் நடத்தக் கூடாது தொழிலாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கக் கூடிய ஒவ்வொரு சாத்தியப்பாட்டையும் நாம் மிக ஆர்வமுடன் நமக்குச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும்.

இராணுவத்தில் வெளிப்படுகின்ற வர்க்கப் பகைமைகளை—பொருளாதார ரீதியில் மிகவும்சாதகமான நிலையில் அதிகாரிகள் இருப்பதற்கு எதிரிடையாக சாதாரண படைவீரர்கள் மோசமாக நடத்தப்படுவதையும், சமூக வாழ்வில் உத்திரவாதம் ஏதுமின்றி இருப்பதையும்—படைவீரர்களுக்கு மிகத் தெளிவாக காட்டியாக வேண்டும். இத்துடன் சுரண்டப்படும் வர்க்கங்களின் தலைவிதியோடு அவர்களது எதிர்காலம் பின்னிப் பிணைந்திருக்கிறது என்ற உண்மையை கீழ்மட்டத்தினர் உணரும்படியாக கிளர்ச்சிகள் இருக்க வேண்டும் புரட்சிக் கொந்தளிப்பு ஆரம்ப நிலைக்கு முந்திய காலத்தில் எல்லா படைத் தலைவர்களும் படைவீரர்களாலும், மாலுமிகளாலும் ஜனநாயகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், படை வீரர்கள் கவுன்சில்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் கோரி கிளர்ச்சி செய்வகானது முதலாளித்துவ ஆட்சியின் அடித்தளங்களை குழிபறிப்பதற்கு மிகவும் சாதகமானதாக விளங்கும்.

முதலாளித்துவ வர்க்கத்தினர் வர்க்க யுத்தத்தில் பயன்படுத்தும் பொறுக்கி எடுத்த படைகளுக்கு எதிராக குறிப்பாக அதன் தொண்டர் படைகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்கையில் மிக நெருக்கமாக கண்காணிப்பதும் அதிகபட்சம் கவனம் செலுத்துவதும் எப்போதும் அவசியம்.

மேலும் இந்தப்படைகளின் சமூக சேர்க்கையும், ஊழல் மிக்க நடத்தையும் கிளர்ச்சி நடத்துவதற்கு அளிக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் சீர்குலைவுகள் ஏற்படுத்த பயன்படுத்த வேண்டும். எங்கெல்லாம் இராணுவம் தனது தனிச்சிறப்பான முதலாளித்துவ வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறதோ, எடுத்துக் காட்டாக அதன் அதிகாரிகள் பட்டாளத்தில், அங்கெல்லாம் அது மக்களிடமிருந்து தனிமைப்பட்டு அதன் விளைவாய் தனக்குத் தானே சீர்குலைந்து போகுமளவிற்கு அனைத்து மக்களின் முன் அதன் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டும்; மக்கள் அதனை மிகவும் வெறுக்கும்படியும் எதிர்க்கும்படியும் செய்ய வேண்டும்.

## V. அரசியல் போராட்டத்துக்கான நிறுவனம்

### அரசியல் இயக்கங்களை எவ்வாறு நடத்துவது?

**31.** பொதுவுடமைக் கட்சியைப் பொறுத்தவரை அதன் கட்சி நிறுவனம் அரசியல் நடவடிக்கையைச் செய்ய இயலாத காலம் என்று எதுவும் இருக்க முடியாது. எந்த ஒரு அரசியல் பொருளாதார நிலைமையையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக—இதுபோலவே இந்த நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களை பயன்படுத்திக் கொள்வதற்காக—ஸ்தாபனத்தின் யுத்த திட்டமும் போர்த்தந்திரமும் வளர்த்தெடுக்கபபட வேண்டும். கட்சி எவ்வளவு பலவீனமாக இருந்தபோதிலும் முறைப்படி திட்டமிட்டும் சிறப்புத் தேர்ச்சியுடனும் ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரமான பிரச்சாரத்தின் மூலம் எழுச்சியூட்டுகின்ற அரசியல் நிலைமைகளையும், அல்லது முழு பொருளாதார கட்டமைவையும் பாதிக்கும் பரந்து விரிந்த வேலை நிறுத்தங்களையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது முடியும்: ஒரு குறிப்பிட்ட நிலைமையை பயன்படுத்திக் கொள்வது என்று கட்சி தீர்மானித்தவுடன் தனது உறுப்பினர்கள் அனைவரின் மற்றும கட்சி முழுவதன் சக்தியையும் இந்த இயக்கத்தில் ஒன்று குவிக்க முனைய வேண்டும்.

மேலும், ஒரு வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியான மேல் நடவடிக்கைகளுக்கும் அரசியல் முக்கியத்துவம் உடைய மையங்களில் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கும் கட்சியானது தனது கருக்குழுக்கள் மற்றும் தொழிலாளர் குழுக்களின் வேலைகளின் மூலம் பெற்ற அனைத்து தொடர்புகளையும் பயன்படுத்த வேண்டும். கட்சியின் பேச்சாளர்கள் பொதுவுடமைவாதம் மட்டுமே போராட்டத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவர இயலும் என்று கூட்டத்தில் உள்ளவர்கள் ஏற்கும்படி செயயத் தம்மால் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும் இத்தகைய கூட்டங்களுக்கான முற்ற முழுதான தயாரிப்பை விசேடமான குழுக்கள் செய்ய வேண்டும். ஏதோ சில காரணங்களினால் கட்சி தானே இத்தகைய கூட்டங்களை நடத்த முடியாமல் போகுமானால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர்களோ அல்லது போராடும் தொழிலாளர்களின் ஒரு பிரிவினரோ ஏற்பாடு செய்யும் பொதுக் கூட்டங்களில் பொருத்தமான தோழர்கள் உரையாற்ற வேண்டும்.

கூட்டத்தின் பெரும்பான்மையினர் அல்லது கணிசமான பகுதியினர் நமது கோரிக்கையை ஏற்கச் செய்யத் தூண்டிவிடுவது சாத்தியப்படும்போது, அவை தன்கு உருவாக்கப்பட்டு மற்றும் தீர விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் முடிவுகளாக நிறைவேற்றப்பட வேண்டும்; இவை அதே இடத்திலோ அல்லது வேறு பகுதிகளிலோ அதே பிரச்சினையின் மீது பலமான சிறுபான்மையினரான மேலும் மேலும் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இம்மாதிரியான தீர்மானங்களை நிறைவேற்றச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் இந்த வழியில் நாம் உழைக்கும் மக்கள் திரளினரை அப்போதைய இயக்கத்தில் உறுதிப்படுத்தவும் நமது தார்மீக செல்வாக்கின் கீழ் கொண்டு வரவும் அவர்கள் நமது தலைமையை அங்கீகரிக்கச் செய்யவும் இயலும்.

இத்தகைய கூட்டங்கள் முடிந்த பின்னர் இவற்றுக்கான நிறுவன தயாரிப்புகளில் ஈடுபட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திய கமிட்டிகள் ஒரு மாநாடு நடத்தி கட்சியின் மேல்மட்டக் கமிட்டிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். எதிர்காலத்துக்கான சரியான முடிவுகளை, அனுபவங்கள் அல்லது தவறுகளிலிருந்து பெற்ற முடிவுகளை கொண்டதாக அந்த அறிக்கை இருக்க வேண்டும். ஒவ்வொரு குறிப்பிட்ட நிலைமைக்கும் ஏற்ப பிரச்சனையில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் அன்றாட கோரிக்கைகள், சுவரொட்டிகள், அச்சிடப்பட்ட பிரசுரங்களில் (பிரகடனங்கள்) வெளிப்படையாக முன்வைக்கப்பட்டு அவை தொழிலாளர்களிடையே வினியோகிக்கப்பட வேண்டும். பொதுவுடைமைக் கொள்கைகள் அந்த நிலைமைக்கு எப்படி பொருத்தமானவையாகவும் குறிப்பிட்ட நிலைமைக்குப் பிரயோகிக்கப்படக் கூடியதாகவும் இருக்கிறது என்பதை தொழிலாளர்களுக்கு அவர்களுடைய சொந்த கோரிக்கைகள் வாயிலாக நிரூபிக்க வேண்டும். சுவரொட்டிகளை வினியோகிக்கவும், பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யவும், ஒட்டுவதற்கான சரியான நேரத்தைத் தீர்மானிக்கவும் விசேடமாக அமைக்கப்பட்ட குழுக்கள் தேவை. அச்சிடப்பட்ட பிரகடனங்கள் தொழிற்சாலைகளுக்கு உள்ளேயும், வாயிலிலும், தொழிலாளர்கள் கூடப்போகின்ற அரங்குகளிலும், வேலை தேடித் தரும் அலுவலகங்கள் மற்றும் ரயில் நிலையம் போன்று நகரின் முக்கியமான இடங்களிலும் வினியோகிக்கப்பட வேண்டும். இத்தகைய துண்டுப் பிரசுர வினியோகத்தைத் தொடர்ந்து உழைக்கும் மக்கள் திரளினர் அனைவரிடையிலும் சுலபமாக பரவுகின்ற கவனத்தை ஈர்க்கின்ற விவாதங்களும் முழக்கங்களும் தொடர வேண்டும். சாத்தியமானால் அச்சிட்ட விவரமான துண்டு பிரசுரங்களை அரங்குகள், தொழிற்சாலைகள் குடியிருப்புகள் அல்லது பிற இடங்களில் அதாவது எங்கு இந்த அச்சிடப்பட்ட பிரசுரங்களுக்கு உரிய கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறதோ அங்கு வினியோகிக்கப்பட வேண்டும்.

எல்லா தொழிற்சங்கங்களிலும் பிரச்சினை முட்டி மோதும் காலத்தில் நடக்கின்ற தொழிற்சாலை கூட்டங்களிலும் நாம் செய்கின்ற இணையான நடவடிக்கைகள் மூலம் இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். நமது தோழர்களாலோ அல்லது நம்மை ஆதரிப்பவர்களாலோ ஏற்பாடு செய்யப்படும் இக்கூட்டங்களில் பொருத்தமான நமது பேச்சாளர்களும் ஆற்றல்மிகு வாதிடுவோர்களும் வாய்ப்பைப் பயன்படுத்தி பரந்துபட்ட மக்கள் நமது கருத்தோட்டத்தை ஏற்குமாறு செய்ய வேண்டும். நமது கட்சி செய்திப் பத்திரிக்கைகள் இத்தகைய விசேடமான இயக்கத்திற்கு அதிகமான பக்கங்களையும் அதே போல் அதனை சிறந்த முறையில் நியாயப்படுத்துவதற்கான வாதங்களுக்கு முக்கியத்துவத்தையும் அளிக்க வேண்டும். செயல் ஊக்கமுள்ள நமது கட்சி நிறுவனங்கள் அப்போதைக்கு தற்காலிகமாக இத்தகைய இயக்கத்தின்

www.padippakam.com

பொது நோக்கத்திற்காக சேவை செய்து இதில் பணியாற்றும் தோழர்கள் குன்றாத ஆற்றலுடன் செயலாற்ற உதவ வேண்டும்.

**நிலைமைக்கு ஏற்ப இயங்கும் தலைமையும், தொழிற்சாலை செல்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பும் வெற்றிகரமான ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான உத்திரவாதங்கள்:**

32. ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு நிலைமைக்கேற்ப இயங்கும் தலைமை மற்றும் சுயதியாக தலைமை அவசியம். குறிப்பிட்ட நடவடிக்கையின் நோக்கத்தை நெருக்கமாக கண்காணித்து ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஒரு ஆர்ப்பாட்டம் அதிகபட்சம் சாத்தியமான விளைவை ஏற்படுத்தி விட்டதா என்று கணிக்கின்ற ஆற்றல் படைத்த தலைமை அல்லது ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தங்கள், ஏன் ஒரு பொது வேலை நிறுத்தம் என்று மக்கள் திரள் நடவடிக்கையின் மூலம் இயக்கத்தை அந்த குறிப்பிட்ட நிலைமையில் தீவிரப்படுத்துவது உகந்ததா என்று தீர்மானிக்கின்ற தலைமை அவசியம். யுத்தத்தின்போது நடத்திய சமாதானத்துக்கான ஆர்ப்பாட்டங்கள் நமக்கு கற்பித்தது போல இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடத்தி கலைந்த பிறகு கூட ஒரு கட்சி—ஒரு போரிடும் பாட்டாளி வர்க்க கட்சி—எவ்வளவுதான் சிறியதாக அல்லது சட்டவிரோதமானதாக இருந்தாலும் எழுப்பியுள்ள பிரச்சினை முக்கியமானதாக இருக்கும் பட்சத்தில், மிகப் பெரும் அளவிலான மக்கள் திரளினருக்கு கூடுதலான ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் பட்சத்தில் இதிலிருந்து கவனத்தை திருப்பிடவோ அல்லது அமைதியாய் இருக்கவோ கூடாது. பெரிய தொழிற்சாலைகளை அடிப்படையாக வைத்து ஏற்பாடு செய்யப்பட்டால் தெரு ஆர்ப்பாட்டங்கள் மிகப்பெரும் விளைவை ஏற்படுத்துகின்றன. சிறப்பாக தயாரிக்கப்பட்ட நமது கருக்குழுக்கள் மற்றும் தொழிலாளர் குழுக்களின் வாய் வழியான, மற்றும் அச்சிட்ட பிரகடனங்கள் மூலமான பிரச்சாரம் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் ஒருகுறிப்பிட்ட அளவு சிந்தனை மற்றும் நடவடிக்கைக்கான ஒற்றுமையைக் கொண்டு வருவதில் வெற்றி பெற்று இருக்குமானால் நிர்வாகக் கமிட்டியானது தொழிற்சாலையில் உள்ள நம்பிக்கைக்குரிய கட்சி உறுப்பினர்களையும் கருக்குழுக்கள் மற்றும் தொழிலாளர் குழுக்களின் தலைவர்களையும் அழைத்து விவாதித்து திட்டமிட்ட நாளில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான நேரம் மற்றும் வேலையை இறுதியாக்கவும், மேலும் முழக்கங்களைத் தீர்மானிக்கவும், ஆர்ப்பாட்டத்தை தீவிரப்படுத்தும் வாய்ப்புகள், நிறுத்துவதற்கான மற்றும் கலைந்து செல்வதற்கான தருணம் ஆகியவற்றைத் தீர்மானிக்கவும் வேண்டும் நன்கு அறிவுறுத்தப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த நிர்வாகிகள் குழு ஆர்ப்பாட்டத்துக்கு முதுகெலும்பாக அமைக்கப்பட வேண்டும். ஆர்ப்பாட்டம் தொழிற்சாலையில் இருந்து தொடங்குவது முதல் கலையும் வரை மக்களிடையில் அவர்கள் கலந்திருக்க வேண்டும். மக்களிடையில் பொறுப்பான கட்சி ஊழியர்கள் திட்ட வகைப்பட்ட முறையில் கலந்திருக்க வேண்டும். நிர்வாகிகள் அவர்களுக்குள் உயிரோட்டமான தொடர்புகள் வைத்திருக்கவும், அவ்வப்போது உறுப்பினர்களுக்குத்தேவையான அரசியல் அறிவுறுத்தல்கள் தரவுமான நோக்கத்திற்கு இது வசதிப்படும். ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான, நிலைமைக்கேற்ப இயங்கும் அரசியல் ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட இத்தகைய தலைமையைக் கொண்டு இருப்பது பெரிய பெரிய மக்கள் திரள் நடவடிக்கைகளை மிகப் பயனுள்ள முறையில் இடையறாது புதுமைப்படுத்தவும் அடுத்தடுத்து தீவிரப்படுத்தவும் வாய்ப்பு அளிக்கும்.

**ஒன்றுபட்ட தொழிலாளர் வர்க்கம் போராட்டங்களை ஒழுங்கமைப்பதும் சீர்திருத்தவாதிகளை தனிமைப்படுத்துவதும்**

33. உள்நிறுவன பலமும், சோதிக்கப்பட்ட நிர்வாகிகள் படையும், மக்கள் திரளினரிடையே கணிசமான எண்ணிக்கையில் உறுதியானவர்களையும் கொண்டுள்ள பொதுவுடமைக் கட்சிகள் விரிவான இயக்கங்களின் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் மீது துரோகத்தனமான சோசலிஸ்ட் தலைவர்களுக்குள்ளசெல்வாக்கைமுழுமையாக வெற்றி கொள்ளவும், பொதுவுடமைப் பதாகையின் பின் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் திரளினரை அணி திரட்டவும் விரிவான இயக்கங்கள் வாயிலாக எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட நிலைமை தீவிரமாகப் போராடுவதற்கு ஏற்றதா அல்லது அது தற்காலிகமாக தேக்கமான காலமா என்பதைப் பொருத்து பல்வேறு வழிகளிலும் இயக்கங்கள் ஒழுங்கமைக்கப்படவேண்டும். சாதகமான நிலைமையானால் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தலைமையில் முனைப்புடன் தம்மை நிறுத்திக் கொண்டு அக்கட்சிகள் செயல்படவேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிறுவன முறைகளை தெரிந்தெடுப்பதற்கு கட்சியின் கட்டமைப்பு ஒரு தீர்மானகரமான காரணியாகும்.

எடுத்துக்காட்டாக 'பகிரங்க கடிதம்' வெளியிடுவது என்ற முறை ஜெர்மனியில்—மற்ற நாடுகளில் சாத்தியப்படாத இம்முறை-சமுதாய ரீதியில் தீர்மானகரமான பாட்டாளி வர்க்கப் பிரிவுகளை வென்றெடுப்பதற்கு பெருமளவு பயன்படுத்தப்பட்டது. யுத்தத்தின் அழிவு அதிகரித்துக் கொண்டும், வர்க்க மோதல்கள் தீவிரமாகிக் கொண்டும் இருந்த தருணத்தில், துரோகத்தனமான சோசலிஸ்ட் தலைவர்களது முகமூடியை கிழிப்பதற்காக ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் பிற எல்லா மக்கள் திரள் அமைப்புகளை நோக்கி இத்தகு பகிரங்கக் கடிதங்களை வெளியிட்டது. பலமான நிறுவனங்கள் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் அவை பொதுவுடமைக் கட்சியுடன் ஒத்துழைத்து போராட்டங்களை எடுக்கத் தயாரா என்பதை பாட்டாளி வர்க்கத்தின் முன்னிலையில் அவைகளிடமிருந்து கோரும் நோக்கத்திற்காக ஜெர்மன் கட்சி அவ்வாறு செய்தது.

பாட்டாளி வர்க்கம் பராரியாக்கப்படுவதற்கு எதிராகவும் மிகச் சிறு கோரிக்கைகளுக்காகவும், ஏன் துண்டு ரொட்டிக்காகவும் கூட பொதுவுடமைக் கட்சியுடன் இணைந்து போராட முன்வருமாறு அவைகளை பகிரங்கக் கடிதம் கோரியது.

இது போன்ற இயக்கத்தை பொதுவுடமைக் கட்சி முன் முயற்சி எடுத்து துவக்கும் போது, தொழிலாளர் வர்க்கத்தின் பரந்துபட்ட மக்கள் திரளினரிடையே இத்தகைய நடவடிக்கை சென்றடையும் நோக்கத்திற்காக கட்சியானது முழுமையான நிறுவன ரீதியான தயாரிப்புகளைச் செய்ய வேண்டும்.

பாட்டாளி வர்க்கத்தின் அதி முக்கிய கோரிக்கைகளின் திரட்சியான உருவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கட்சியால் முன்வைக்கப்படும் கோரிக்கையை கட்சியின் அனைத்து தொழிற்சாலைக் குழுக்களும், தொழிற்சங்க நிர்வாகிகளும் அடுத்து வருகின்ற தமது தொழிற்சாலை அல்லது தொழிற்சங்க கூட்டங்களில் அது போலவே பொதுக் கூட்டங்களிலும்—இத்தகைய கூட்டங்களுக்கான தயாரிப்புகளை முழுமையாகச் செய்து கொண்டு— விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பரந்துபட்ட தொழிலாளர்களின் உத்வேகத்தை சாதகமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் துண்டுப் பிரசுரங்கள், அச்சிட்ட பிரகடனங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை எங்கும் வினியோகிக்க வேண்டும்; நமது கருக்குழுக்கள் அல்லது தொழிலாளர் குழுக்கள் நமது கோரிக்கைகளை மக்கள் ஆதரிக்கச் செய்ய முயற்சிக்கும் இடங்களில் மேலும் சிறப்பாக வினியோகிக்க வேண்டும் இத்தகைய இயக்கம் நடைபெறும்போது இந்த இயக்கத்தின் பிரச்சனைகளைப் பற்றி இடையறாத விளக்கங்களை கட்சிப் பத்திரிக்கைகள் தர வேண்டும். இடையறாது தினசரி சிறு விளக்கங்கள் அல்லது விளக்கமான கட்டுரைகள் பிரச்சனையின் பல்வேறு படிநிலைகளையும் சாத்தியமான ஒவ்வொரு கருத்தோட்டத்திலிருந்தும் பத்திரிக்கைகள் அவற்றை விளக்க வேண்டும். இத்தகையகட்டுரைகளுக்கான விசயதானங்களை கட்சி நிறுவனம் தொடர்ந்து பத்திரிக்கைக்கு அளிக்கவும் கட்சியின் இயக்கத்தைமேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு பத்திரிக்கை ஆசிரியர்கள் தனது முயற்சிகளை கைவிட்டு விடாமல் தமது கவனத்தைச் செலுத்துமாறும நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். இத்தகைய போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கட்சியின் நாடாளுமன்றக் குழுக்களும், நகராட்சி உறுப்பினர்களும் திட்டவகைப்பட்ட முறையில் வேலை செய்யவேண்டும். கட்சித் தலைமையின் வழிகாட்டுதலின்படி தீர்மானங்கள், பிரேரணைகள் மூலம் பல்வேறு நாடாளுமன்றக் குழுக்களிலும் இயக்கத்தைப் பற்றி விவாதத்துக்குக் கொண்டுவர அவர்கள் முயற்சிக்க வேண்டும் இந்தப் பிரதிநிதிகள் தம்மைப் போராடும் மக்கள் திரளினரின் உணர்வு பூர்வமான பிரதிநிதியாகவும், வர்க்க எதிரியின் முகாமில் அவர்களுக்காக வாதாடுபவர்களாகவும், அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளாகவும், கட்சி ஊழியர்களாகவும் தம்மைக் கருதிக் கொள்ள வேண்டும்.

நிறுவன ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட கட்சியின் அனைத்து சக்திகளின் நடவடிக்கைகளும் வெற்றி பெறுமானால், ஒரு சில வாரங்களுக்குள் நமது கோரிக்கைகளை

ஆதரிக்கும் தீர்மானங்கள் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் அங்கீகரிக்கப்படுமானால், நமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக காட்டப்பட்ட மக்கள் திரளினரை உறுதிப்படுத்துவது கட்சியின் மிகப் பாரதூர மான நிறுவன ரீதியிலான கடமையாகும். இந்நிகழ்ச்சியில் ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத் தன்மையை இயக்கம் அடையுமானால் தொழிற்சங்கங்களின் நிறுவனரீதியிலான நமது செல்வாக்கை அதிகரிப்பது என்பதை எல்லா வற்றுக்கும் மேலாக நாம் முயற்சிக்க வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக உள்ளூர் தொழிற்சங்க தலைவர்களின் செல்வாக்கை முறியடிக்கச் செய்வது அல்லது நமது கட்சியினுடைய கோரிக்கையின் அடிப் படையில் ஒருங்கிணைந்து போராட நிர்ப்பந்திப்பது என்ற நோக்கத்தை ஈடேற்ற தொழிற் சங்கங்களில் உள்ள நமது குழுக்கள் அவர்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்டு தயாரிக் கப்பட்ட நேரடி நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். தொழிற்சாலை கவுன்சில்கள், தொழிற்துறை கமிட்டிகள் அல்லது இதுபோன்ற நிறுவனங்கள் இருக்குமிடங்களில் எல்லாம், நமது குழுக்கள் அந்நிறுவனங்களின் விரிவான கூட்டங்களில் செல்வாக்கு செலுத்தி அதன் வாயிலாக அவற்றை போராட்டத்திற்கு ஆதரவாக தீர்மானிக்கச் செய்ய வேண்டும். பொதுவுடமைக் கட்சித் தலைமையின் கீழ் பாட்டாளி வர்க்கத்தின் மிகக் குறைந்தபட்ச கோரிக்கை களுக்காக (நலன்களுக்காக) போராடுவதற்கான இயக் கத்தை ஆதரிக்கும்படி எண்ணிறந்த உள்ளூர் நிறுவனங்கள் செய்யப்பட்டு விட்டால் அவற்றை ஒரு பொது மாநாட்டில் பங்கெடுக்க அழைக்க வேண்டும். இவற்றுக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றிய தொழிற்சாலைக் கூட்டங் களின் சிறப்புப் பிரதிநிதிகளும் இம்மாநாட்டுக்கு அழைக்கப் பட வேண்டும்

## VI. புதிய (புரட்சிகர) தலைமையை உருவாக்குவது

### பகுதி கோரிக்கைகளுக்கான போராட்டங்களை ஒருங்கிணைந்த போராட்டங்களாக மாற்றுவது:

இந்த முறையில் பொதுவுடமைவாத செல்வாக்கின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட புதிய தலைமையானது செயலூக்க முள்ள தொழிலாளர் குழுக்களை ஒன்று குவிப்பதன் மூலமாக புதிய சக்தியாக்கிக் கொள்கிறது. 'சோசலிஸ்ட்' கட்சிகளின் மற்றும் தொழிற்சங்கங்களின் தலைமையை உந்தி முன் தள்ளுவதற்கு அல்லது அவற்றின் முகமூடியைக் கிழித்தெறிவதற்கு இந்த சக்தி பயன்படுத்தப்பட வேண்டும்.

நமது கட்சி மிகச் சிறந்த நிறுவனங்களைப் பெற்றும் அதன் கோரிக்கைகளுக்காக மிகப் பெரும் ஆதரவைப் பெற்றும் உள்ள தொழிற்பகுதிகளில், உள்ளூர் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிற்துறை கவுன்சில்கள் மீது ஒழுங் கமைக்கப்பட்ட நிர்பந்தத்தைக் கொடுப்பதன் மூலம் அப் பகுதிகளில் அங்குமிங்குமாக நடைபெறுகின்ற பொருளா தாரப் போராட்டங்களையும் இதுபோலவே பிற குழுக்களின் வளர்ந்து வரும் போராட்ட இயக்கத்தையும் ஒரு ஒருங் கிணைந்த போராட்டமாக வெற்றிகரமாக இணைக்க வேண்டும்.

இதன் பின்னர் இந்த இயக்கமானது குறிப்பிட்ட தொழிற்கிளை நலன்களுக்கு அப்பாற்பட்டு ஆரம்ப நிலை கோரிக்கைகள் அனைத்தையும் முன் வைத்து இவற்றை நிறைவேற்றுவதற்கு போராட முன்வர வேண்டும். இதற்காக மாவட்டத்தில் உள்ள எல்லா நிறுவனங்களின் ஒன்றுபட்ட சக்திகளையும் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய இயக்கத்தில் போராட்டத்திற்குத் தயாராக உள்ள பாட்டாளி வர்க்கத்தவர் அனைவரின் தலைவனாக பொது



வுடமைக் கட்சி தன்னை நிரூபித்துக் கொள்ளும். ஆனால் இத்தகைய ஒன்றுபட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட போராட் டத்தை எதிர்க்கின்ற தொழிற்சங்க அதிகாரத்துவமும் 'சோசலிஸ்ட்' கட்சியும் அவற்றின் சொந்த நிறத்தைக் காட்டி அரசியல் ரீதியில் மட்டுமின்றி, நடைமுறை நிறுவன ரீதியிலான கண்ணோட்டத்திலும் தம்மை அம்பலப்படுத்திக் கொள்ளும்.

### ஒரு கடுமையான நெருக்கடியின் போது வேலைகளை முன்னெடுத்துச் செல்வது எப்படி?

34. புதிய இயக்கங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைகின்ற கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது மக்கள் திரளினரை தனது கட்டுப் பாட்டில் கொண்டுவர பொதுவுடமைக் கட்சி முயற்சிக்க வேண்டும். குறிப்பிட்ட கோரிக்கைகளுக்காக போராடு வதைத் தவிர்த்து சோசலிஸ்ட் கட்சிகள் மற்றும் தொழிற் சங்க உறுப்பினர்களுக்கு நேரடியான வேண்டுகோள் விடுப்பது மிகச் சிறப்பானதாக அமையும்; தீர்மானகரமான போராட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிட அவர்களது அதிகாரத்துவ தலைவர்கள் எத்தனிப்பதையும் மீறி எவ்வாறு வறுமையும், ஒடுக்கு முறையும் அவர்களை தமது எஜமானர்களுக்கு எதிராக வேறு வழியின்றி போராடும்படி தள்ளி வருகின்றன என்பதையும் அவர்களுக்கு சுட்டிக் காட்ட வேண்டும். கட்சியின் பத்திரிக்கைகள் குறிப்பாக தினசரி ஏடுகள், நாள்தோறும் வலியுறுத்த வேண்டியது என்னவெனில் அப்போதைய நெருக்கடியான நிலையில் பொதுவுடமையாளர்கள் நிராதரவான தொழிலாளர்களின் எதிர்வரும் மற்றும் நடைமுறை போராட்டத்திற்கு தலைமை யேற்கத் தயாராய் இருக்கிறார்கள் ஒடுக்கப்பட்ட அனை வருக்கும் சாத்தியமான இடங்களில் எல்லாம் பொதுவுடமை யாளர்களின் போரிடும் நிறுவனம் உதவிக்கரம் நீட்டத் தயாராய் இருக்கிறது—என்பதையே. இந்தப் போராட்டங் களின்றி—பழைய நிறுவனங்கள் இப்போராட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிடவும், அவற்றுக்குத் தடையேற்படுத்து வதற்கும் எவ்வளவுதான் முயன்ற போதிலும்—தொழிலாளர் களின் வளர்ந்து வரும் சகிக்க முடியாத வாழ்க்கை நிலைமைகளை மாற்றுவதற்கு சாத்தியமே இல்லை என்பதை நாம் நாள்தோறும் சுட்டிக்காட்ட வேண்டும். தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் உள்ள பொதுவுடமைவாத பிராக்ஷன்கள் பொதுவுடமை யாளர்கள் சுயதியாகத்துக்கு தயாராய் இருப்பதையும் இந்தப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதையும் சக தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். எப்படியா யினும் அப்போதைய நிலைமையில் எழுகின்ற எல்லா போராட்டங்களையும், இயக்கங்களையும் ஒன்றுபடுத்து வதும், உறுதிப்படுத்துவதும் பிரதானக் கடமையாகும். போராட்டத்தில் ஈர்க்கப்பட்டுள்ள தொழிற்துறை மற்றும் கைவினைத் தொழிலில் உள்ள கருக்குழுக்கள், பிராக்ஷன் கள் அனைத்தும் தமக்குள் நெருக்கமான இணைப்புகள் வைத்திருப்பது மட்டுமின்றி வெடித்து எழக்கூடிய எல்லா இயக்கங்களுக்கும் தலைமை அளிக்கவும் வேண்டும். போராட்டத்தை விரிவுபடுத்தவும், ஆழப்படுத்தவும், அதை பரவலாக்கவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கரம் கோர்த்து பணியாற்றக்கூடிய நிர்வாகிகள் மற்றும் பொறுப்புள்ள ஊழியர்களை உடனுக்குடன் அனுப்பி மாவட்டக் கமிட்டிகளும் மத்தியக் கமிட்டிகளும் இயக்கத் துக்குத் தலைமை அளிக்க வேண்டும். அவசியமானால் அரசியல் வழியில் பிரச்சனைக்குப் பொதுத் தீர்வு காணும் கருத்தை வளர்ப்பதற்காக அனைத்து வகைப்பட்ட போராட்டங்களின் பொதுத்தன்மையை சுட்டிக் காட்டுவதும் வலியுறுத்துவதும் ஒவ்வொரு இடத்திலுமுள்ள நிறுவனத் தின் பிரதான கடமையாகும். போராட்டங்கள் மேலும் தீவிர மடைந்து பொதுத்தன்மை பெறுகையில் போராட்டத் தலைமைகளை ஒரே மாதிரியான அமைப்புகளாக உரு வாக்குவது அவசியமாகும். தொழிற்சங்க அதிகாரத்துவ வேலை நிறுத்தத் தலைவர்கள் தோல்வியுறும் இடங் களில் எல்லாம் பொதுவுடமையாளர்கள் உடனடியாக முன்வந்து நடவடிக்கைக்கான தீர்மானகரமான நிறுவனத்தை—சாதாரணமான ஆரம்ப நிறுவனத்தை— உத்திரவாதம் செய்ய வேண்டும். பிராக்ஷன்கள் மற்றும் தொழில் கவுன்சில்களின் கூட்டங்களிலும் சம்பந்தப்பட்ட தொழில்களின் பொதுக் கூட்டங்களிலும் விடாப்பிடியாக வலியுறுத்துவதன் மூலம், செயல் திறனுள்ள போர்க்குண மிக்க தலைமையின் கீழ் இதனைச் சாதிக்க முடியும்.

இயக்கம் பரவலாகி முதலாளிகளின் நிறுவனங்களின் தாக்குதல்கள் மற்றும் அரசாங்கத் தலையீட்டால் அரசியல் தன்மையைப் பெறும் போது, தொழிலாளர்கள் கவுன்சில் களை தேர்ந்தெடுப்பதற்கான ஆரம்ப பிரச்சாரம் மற்றும் நிறுவன வேலையைத் துவங்க வேண்டும்; அத்தருணத்தில் இவை சாத்தியமாகவும் அவசியமானதாகவும் ஆகலாம்.

இங்குதான் கட்சி உறுப்புகள் அனைத்தும் தொழிலாளர் வர்க்கம் தனது சொந்தப் போராட்ட ஆயுதங்களை வார்த் தெடுப்பதன் மூலமே தனது சொந்த விடுதலையைச் சாதிக்க முடியும் என்ற கருத்தை வலியுறுத்த வேண்டும். இந்தப் பிரச்சாரத்தில் தொழிற்சங்க அதிகாரத்துவத்திற்கோ அல்லது பழைய சோசலிஸ்ட் கட்சிகளுக்கோ இம்மியளவும் கருணை காட்டக் கூடாது.

35. ஏற்கனவே பலமாக வளர்ந்துள்ள குறிப்பாக மக்கள் திரளுடைய, பெரிய பொதுவுடமைக் கட்சிகள் மக்கள் திரள் நடவடிக்கைக்குத் தயாரிப்புகளைச் செய்து

கொள்ள வேண்டும். பரந்துபட்ட மக்கள் திரளினருடன் நெருக்கமான ஒற்றுமையைக் கொண்டு வருவதற்கான அரசியல் ஆர்ப்பாட்டங்கள், பொருளாதார இயக்கங்கள் மற்றும் இதுபோன்ற உள்ளூர் நடவடிக்கைகள் அனைத்தின் அனுபவங்களை எப்போதும் ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். தலைமை நிர்வாகிகள், பொறுப்புள்ள கட்சி ஊழியர்கள், நம்பிக்கைக்குரிய பெரிய மற்றும் நடுத்தர தொழில்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடுகளில் எல்லா பெரிய இயக்கங்களிலும் பெற்ற அனுபவங்களைப் பற்றி விவாதிக்க வேண்டும். இம் முறையில் வலைப்பின்னல் போன்ற தொடர்பு தொடர்ச்சியாக அதிகரிக்கும், பலப்படும், நம்பிக்கைக்குரிய தொழிற்சங்க பிரதிநிதிகள் மேலும் மேலும் போரிடும் உணர்வுடன் எழுச்சியுறுவர். தலைமை நிர்வாகிகள் மற்றும் பொறுப்புள்ள கட்சி ஊழியர்களுக்கும் பணிமனைப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பரஸ்பரம் நம்பிக்கையான தொடர்புகள் (உறவுகள்) இருப்பதானது காலம் கனிவதற்கு முந்திய மக்கள் திரள் அரசியல் நடவடிக்கை இராது என்பதற்கும் சூழ்நிலைகளுக்கும் கட்சியின் உண்மையான பலத்துக்கும் ஏற்ற நடவடிக்கைகளே இருக்கும் என்பதற்கும் நிச்சயமான உத்திரவாதமாகும்.

கட்சி நிறுவனங்களுக்கும் பெரும் மக்கள் திரள் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பாட்டாளி வர்க்கத்தினருக்கு மிடையே நெருக்கமான இணைப்புகளை கட்டியமைக்காமல் உண்மையிலேயே புரட்சிகரமான ஒரு இயக்கத்தை வளர்க்க முடியாது. கடந்த ஆண்டு இத்தாலியில் நடந்த சந்தேகத்திற்கிடமற்ற புரட்சிக் கொந்தளிப்பு—தொழிற்சாலைகளைக் கைப்பற்றுவதில் இது தெளிவாக வெளிப்பட்டது—அகாலமாக வீழ்ச்சியுற்றது. இதற்குப் பெருமளவு காரணமாயிருந்தது, தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் துரோகம்—நம்பிக்கை வைக்கத் தகுதி இல்லாத அரசியல் தலைவர்கள்—ஆகியவையாகும். கட்சிக்கும், தொழிலுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் அறவே இல்லாதது, அதாவது கட்சி நலனில் அக்கறை உள்ள அரசியல் அறிவு மிக்க தொழில் நிலைய பிரதிநிதிகள் இல்லாதது இதற்கு ஓரளவு காரணமாகும். இவ்வாண்டு (1921) ஆங்கிலேய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் சந்தேகத்துக்கு இடமின்றி இதே குறைபாடு அளவுக்கு அதிகமாக இருந்ததால் தோல்விக்குள்ளாயிற்று.

## VII. கட்சிப் பத்திரிக்கை பற்றி

### பொதுவுடைமைவாதப் பத்திரிக்கை எப்படி இருக்கவேண்டும்?

36. பொதுவுடைமைவாத பத்திரிக்கை கட்சியால் சோர்வின்றி பெருக்கத்துடன் வளர்க்கப்பட வேண்டும் கட்சியின் ஆணைகளுக்கு கீழ்ப்படியாத எந்தப் பத்திரிக்கையும் பொதுவுடைமைவாதப் பத்திரிக்கை என்று அங்கீகரிக்கப்படலாகாது.

கூடுதலான பத்திரிக்கைகளைப் பெற்றிருப்பதைக் காட்டிலும் சிறந்த தரமான பத்திரிகைகளைப் பெற்றிருக்க கட்சி கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பொதுவுடைமைக் கட்சியும் தரமானதொரு மையப் பத்திரிக்கையை—சாத்தியமானால் தினசரிப் பத்திரிக்கையைப் பெற்றிருக்க வேண்டும்.

37. முதலாளித்துவப் பத்திரிக்கைகளைப் போல ஏன் 'சோசலிஸ்ட்' பத்திரிக்கையைப் போல, பொதுவுடைமைப் பத்திரிக்கையானது முதலாளித்துவ நிறுவனமாக இருக்கக் கூடாது. முதலாளித்துவ கடன் வழங்கும் நிறுவனங்கள் அனைத்திலிருந்தும் நமது பத்திரிக்கை சுயேச்சையானதாக இருக்க வேண்டும். சட்டபூர்வமான மக்கள்திரள் கட்சிகள் நமது பத்திரிக்கை இருப்பதைத் தெரிந்து கொள்ள சாத்தியமாக்குகின்ற வகையில் தேர்ச்சியான விளம்பர ஏற்பாடுகள் அவசியம் ஆனால் இது எந்த விதத்திலும் நமது பத்திரிக்கை பெரிய விளம்பரதாரர்களைச் சார்ந்திருப்பதாக இருக்கக் கூடாது. மாறாக, சமூகப் பிரச்சினைகள் அனைத்திலுமான இதன் பாட்டாளி வர்க்க நோக்கு, இதற்கு மக்கள் திரள் கட்சிகள் அனைத்தின் மத்தியிலும் பெரும் மதிப்பை ஏற்படுத்தும்.

பொது மக்களின் பரபரப்பான அல்லது பொழுது போக்கான விருப்பங்களை நிறைவுசெய்வதாக நமது பத்திரிக்கைகள் இருக்கக் கூடாது. 'மதிப்புக்குரியதாக' ஆகும் முயற்சியில் அவை குட்டி முதலாளித்துவ எழுத்தாளர்கள் அல்லது பத்திரிக்கை நிபுணர்களின் விமர்சனங்களுக்கு பணிந்து விடக்கூடாது.

38. ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் போராடும் தொழிலாளர்களின் நலன்களைப் பற்றி அக்கறை கொள்வதைப் பொதுவுடைமைவாதப் பத்திரிக்கை முதன்மையானதாக எடுத்துக் கொள்ள வேண்டும். பத்திரிக்கையானது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிகச் சிறந்த கிளர்ச்சியாளனாகவும் தலையாயப் பிரச்சாரகனாகவும் விளங்க வேண்டும்.

கட்சி உறுப்பினர்களுடைய நடவடிக்கைகளின் மதிப்பிடற்கரிய அனைத்து அனுபவங்களையும் சேகரித்து அவற்றைத் தோழர்களுக்கு எடுத்துக்காட்டி இந்த அனுபவங்களைக் கொண்டு பொதுவுடைமைவாத வேலை முறையை தொடர்ச்சியாக மாற்றி முன்னேற்றத்தைக் கொண்டு வருவது நமது பத்திரிக்கையின் நோக்கமாகும். இவ்வாறு நமது புரட்சி வேலையின் மிகச் சிறந்த அமைப்பாளனாக பத்திரிக்கை விளங்கும்.

பொதுவுடைமைவாதப் பத்திரிக்கையின், குறிப்பாக நமது பிரதானப் பத்திரிக்கையின் அனைத்தும் தழுவிய நிறுவன வேலையின் மூலம் தான். நிச்சயமான இந்த நோக்கத்தினைக் கொண்டுதான், நாம் ஜனநாயக மத்தியத்துவத்தை நிறுவுவதும், பொதுவுடைமைக் கட்சியின் வேலைகளில் சிறப்பான பகிர்ந்தளித்தலைச் செய்வதும் முடியும். இவ்வாறு தான் பத்திரிக்கையானது தனது வரலாற்றுக் கடமையை ஆற்ற முடியும்.

### ஒரு பொதுவுடமைவாதப் பத்திரிக்கையை நிறுவுவது:

39. பொதுவுடைமைவாதப் பத்திரிக்கை ஒரு பொதுவுடைமைவாத நிறுவனமாக ஆக முயற்சிக்க வேண்டும். அது ஒரு பாட்டாளி வர்க்கப் போரிடும் நிறுவனமாக இருக்க வேண்டும். பொதுவுடைமை வாத பத்திரிக்கையானது புரட்சிகளின் பொதுக்கூட்டம் வரை, ஒரு பயிற்சியாளரை மோசமாக நடத்துவது முதல் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கை வரை—பத்திரிக்கையில் உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும். தொழிற்சங்க பிராக்ஷன் தனது கூட்டங்கள் மற்றும் செயலாளர்களின் முக்கியமான முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் பற்றியும் நமது எதிரிகளின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளைப் பற்றியும் செய்திகள் தர வேண்டும். வீதிகளிலும் கூட்டங்களிலும் நிகழ்கின்ற பொது வாழ்க்கை பற்றிய விபரங்கள் உன்னிப்பான கட்சி உறுப்பினர்களுக்கு சமுதாயத்தைப் பற்றி விமர்சிக்க வாய்ப்புகளை அளிக்கும். இந்த விபரங்கள் நமது கட்சிப் பத்திரிகையில் வெளியிடப்படும்போது, அவை ஏற்கெனவே நாம் எவ்வாறு வாழ்க்கையின் அன்றாட தேவைகள் மீது கவனம் செலுத்தி வருகிறோம் என்பதைப் பற்றி மேலோட்டமான வாசகர்களுக்குக்கூட தெளிவாகக் காட்டும்.

### தொழிலாளர்களுடன் தொடர்புகள்:

தொழிலாளர்களிடமிருந்தும் தொழிலாளர் வர்க்க அமைப்புகளிடமிருந்தும்தொழிலாளர்களது வாழ்க்கையைப் பற்றி வரும் செய்திகள் ஆசிரியர் குழுவால் மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் கையாளப்பட வேண்டும்; இந்தச் செய்திகள் சிறு தகவல்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; இவைபத்திரிக்கைக்கும் தொழிலாளர்வாழ்க்கைக்கும் நெருக்கமான பிணைப்பு இருக்கும் உணர்வை வெளிப்படுத்தும்; அல்லது தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கையின் நடைமுறை உதாரணங்களில் இருந்து பொதுவுடைமைவாதக் கொள்கைகளை விளக்குவதற்காகப் பயன்படுத்த முடியும். ஆசிரியர் குழுவானது தம்மை சந்திக்க வரும் தொழிலாளர்களைச் சந்திக்க ஒவ்வொரு நாளும் வசதியான ஒரு நேரத்தை ஒதுக்க வேண்டும். அப்போது அவர்களது விருப்பங்கள் அல்லது வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றிய புகார்கள் பற்றிக் கேட்டறிந்து அவற்றைக் குறித்துக் கொண்டு கட்சிக்கு தெளிவுபடுத்துவதற்கு இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

### ''பிராவ்தா''வின் முன்னுதாரணம்:

முதலாளித்துவக் கட்டமைவின் கீழ் நம்முடைய பத்திரிக்கைகள் முழுக்கவும் பொதுவுடைமைவாத ஊழியர்களின் கூட்டு நிறுவனமாக ஆவது சாத்தியமில்லை என்பது உண்மையே. எப்படி இருப்பினும் மிகமிகக் கடுமையான சூழ்நிலைகளிலும் கூட இத்தகைய புரட்சிப் பத்திரிக்கை ஒன்றை நிறுவி அமைப்பதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி ஈட்டுவது சாத்தியமே 1912-13 காலத்தில் ரஷ்யத் தோழர்களின் ''பிராவ்தா''வால் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவினுடைய மிகமிக முக்கியமான மையங்களின் உணர்வுபூர்வமான புரட்சிகர தொழிலாளர்களின் நிரந்தரமான மற்றும் ஊக்கமான நிறுவனத்தை இது உண்மையில் பிரதிநிதித்துவப்படுத்தியது. பத்திரிக்கையின் படைப்புகளை மேற்பார்வையிட்டு தீர்மானிப்பது, வெளியிடுவது,

www.padippakam.com

வினியோகிப்பது ஆகியவற்றைத் தோழர்கள் தமது கூட்டு முயற்சியில் செய்தனர். அவர்களில் பலர் தமது வேலையுடன் சேர்த்து இதைச் செய்ததுடன் தமது ஊதியத்திலிருந்து பணத்தையும் ஒதுக்கினர். இவற்றுக்குக் கைமாறாக அப்பத்திரிக்கையானது அவர்கள் விரும்பிய மிகச் சிறந்த படைப்புகளை அளித்தது; அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்பட்டவற்றையும் மேலும் அவர்கள் தமது வேலையிலும் போராட்டத்திலும் பயன்படுத்தக் கூடியவற்றையும் அவர்களுக்கு அளித்தது. இத்தகைய பத்திரிக்கை கட்சி உறுப்பினர்களாலும் பிற புரட்சிகரத் தொழிலாளர்களாலும் "நமது பத்திரிக்கை" என்று உண்மையாகவும் யதார்த்தமாகவும் அழைக்கப்பட்டது.

40 கட்சியால் இயக்கப்படும் இயக்கங்களில் நேரடியாகப் பங்கேற்பது போர்க்குணமிக்க பொதுவுடமைவாதப் பத்திரிக்கையின் சரியான பண்பாகும். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் கட்சியின் நடவடிக்கை குறிப்பிட்டதொரு இயக்கத்தில் குவிந்திருக்குமானால் இந்தக் குறிப்பிட்ட இயக்கத்துக்கு பணியாற்ற பத்திரிகை தனது அனைத்து துறைகளையும்—தலையங்க பக்கங்கள் மட்டுமல்ல—ஈடுபடுத்துவது அதன் கடமையாகும். இந்த இயக்கத்துக்கு உதவும்படியாக பத்திரிக்கை முழுவதிலும்—அதன் உள்ளடக்கம், உருவம் என்ற இரண்டிலும்—அதற்கான பொருளாய்த மற்றும மூலாதார விசயங்களை சேகரித்தளிப்பதை ஆசிரியர் குழு செய்ய வேண்டும்.

41. "நமது பத்திரிக்கை"க்காக சந்தாக்கள் சேகரிப்பது என்பது ஒரு கட்டமைப்பாக ஆக்கப்பட வேண்டும். தொழிலாளர்களைக் கொதித்தெழச் செய்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் (சந்தர்ப்பத்தையும்) தொழிலாளர்களின் கர தொழிலாளர்களின், பத்திரிக்கைக்குத் தொடர்ச்சியாகப் படைப்புகளைத் தரும் எழுத்தாளர்கள் அனைவரின், ஆசிரியர்களின், அச்சுக் கோர்ப்பவர்களின், அச்சிடுபவர்களின், வினியோகிப்பவர்களின், உள்ளூர் விசயங்களை சேகரித்து பத்திரிக்கைக்குத் தந்து அவற்றைப் பற்றி பத்திரிக்கைகளில் விவாதிப்பவர்களின், பத்திரிக்கைக்காக நாள்தோறும் ஊக்கமாகப் பிரச்சாரம் செய்பவர்களின், இன்னும் பத்திரிக்கையோடு தொடர்புடையோரின் கூட்டு முயற்சியில் இயங்கும் நிறுவனமாகும். ஒரு பத்திரிக்கையை உண்மையான போரிடும் நிறுவனமாக, பொதுவுடமையாளர்களின் பலமிக்க கூட்டு நிறுவனமாக மாற்றுவதற்கு பல நடைமுறை ரீதியிலான நடவடிக்கைகள் தேவை.

ஒரு பொதுவுடமைவாதி தனது பத்திரிக்கையுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்க வேண்டும் அதற்காக அவர் வேலை செய்யவும் தியாகங்கள் புரியவும் வேண்டும். பத்திரிக்கை அவரது அன்றாட ஆயுதமாகும்; சிறப்பாகப் பயன்படுத்தவதற்கு தகுதி உடையதாக்க அதை நாள் தோறும் உறுதிப்படுத்தவும், கூர்மைப்படுத்தவும் வேண்டும். பொதுவுடமைவாதப் பத்திரிக்கை நிலைத்திருக்க வேண்டுமானால் அதற்குத் தொடர்ச்சியாக அதிக அளவிலான பொருள் மற்றும் நிதியைத் தியாகம் செய்ய வேண்டும். அதன் வளர்ச்சி மற்றும் செழுமைக்கான சாதனங்கள், கட்சி உறுப்பினர்களான அணிகளிடமிருந்து இடையறாது அளிக்கப்பட வேண்டும். பத்திரிக்கையானது உறுதியான நிறுவனமாக நிறுவப்படும் நிலைமைக்கு, சட்டபூர்வ மக்கள்திரள் கட்சிகளில் போதுமான எண்ணிக்கையில் பிரதிகள் விற்கப்பட்டு பொதுவுடமை இயக்கத்திற்கு அதுவே ஒரு பல மிக்க ஆதரவு சக்தியாக வளரும் நிலையை அடையும் வரை இவ்வாறு கீழிருந்து ஆதரவு பெறுவது நீடிக்கும்.

ஒருவர் பத்திரிக்கையின் ஊக்கமான சந்தா சேகரிப்பவராகவும் அதற்காகப் பிரச்சாரம் செய்பவராகவும் இருப்பது மட்டும் போதாது; அதற்கு படைப்புகள் தருபவராகவும் இருக்க வேண்டும்.

தொழில் நிலையங்களில் நிகழ்கின்ற சமூக அல்லது பொருளாதார முக்கியத்துவமுடைய நிகழ்ச்சி ஒவ்வொன்றும்—ஒரு சாதாரண விபத்து முதல் தொழிலாளர் அரசியல் மற்றும் சமூக உணர்வை தூண்டிவிடக் கூடிய விசேட நிகழ்ச்சியால் ஏற்படும் ஒவ்வொரு நிலைமையையும் பயன்படுத்திக் கொள்வசு முதலாவது விசயம். இவ்வாறாக ஒவ்வொரு பெரிய வேலை நிறுத்த இயக்கம் அல்லது கதவடைப்பை அடுத்த—அப்போது பத்திரிக்கை பகிரங்கமாகவும், ஊக்கமாகவும் தொழிலாளர் நலன்களுக்காக குரல் கொடுத்திருக்கும்—போராட்டத்தில் பங்கேற்பவர்கள் மத்தியில் சந்தா சேர்ப்பு இயக்கம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட வேண்டும். பத்திரிக்கை சந்தா விண்ணப்பங்களையும் பொதுவுடமையாளர்கள் ஊக்கமாக வேலை செய்யும் தொழில்களிலும், வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிற்சங்க பிராக்‌ஷன்கள் பணியாற்றும் தொழில்களிலும் மட்டுமின்றி எவ்வெப்போது சாத்தியமோ அவ்வப்போதெல்லாம் விசேடக் குழுக்கள் அல்லது பத்திரிக்கைக்காக பிரச்சாரம் செய்யும் தொழிலாளர்கள் வீடுவீடாகச் சென்று வினியோகிக்க வேண்டும்.

இது போலவே தொழிலாளர்களை எழுச்சியுறச் செய்த ஒவ்வொரு தேர்தல் பிரசசார இயக்கத்தைத் தொடர்ந்தும் விசேட பிரச்சாரத்துக்கான குழுக்கள் தொழிலாளர்களின் வீடுகளுக்குச் சென்று தொழிலாளர்களின் பத்திரிக்கைக்காகத் திட்டமிட்ட பிரச்சாரத்தை நடத்த வேண்டும்.

மிகப்பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் பாதிக்கின்ற விலைவாசி உயர்வு, வேலையின்மை மற்றும் பிற இடர்பாடுகள் வாயிலாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் போது, பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழில் ரீதியில் அமைக்கப்பட்ட தொழிலாளர்களை வென்றெடுக்க வேண்டும். பத்திரிக்கைக்காக வீடு வீடாகச் சென்று திட்டமிட்ட பிரச்சாரத்தை நடத்துவதற்காக அவர்களை ஒழுங்கமைக்க சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் கடைசி வாரம் சந்தா சேர்ப்பு வேலைக்கு மிகமிகப் பொருத்தமான நேரமாகும் என்பதை அனுபவம் காட்டுகிறது. ஒரு மாதத்தின் கடைசி வாரத்தை பத்திரிக்கைக்காகப் பிரச்சாரம் செய்யும் வேலைக்குப் பயன்படுத்த தவறும் எந்த ஒரு உள்ளூர் குழுவும், பொதுவுடமை இயக்கத்தைப் பரவலாக்குவதைப் பொருத்தவரை கடுமையான கேட்டை விளைவிக்கிறது என்று அர்த்தம். பத்திரிக்கைக்காகப் பிரச்சாரத்தை நடத்தும் வேலைக்கான குழு எந்த ஒரு பொதுக் கூட்டத்திலும் அல்லது எந்த ஒரு ஆர்ப்பாட்டத்திலும் இல்லாமல் இருக்கக் கூடாது; அதன் துவக்கம், இடைவேளை, முடிவு ஆகியவற்றின் போது பத்திரிக்கைக்கான சந்தா பட்டியலுடன் தோன்ற வேண்டும். ஒவ்வொரு தொழிற்சங்க கூட்டத்தின் போது பிராக்‌ஷன்களும் ஒவ்வொரு பணிமனைக் கூட்டத்தின் போதும் குழு மற்றும் பிராக்‌ஷன்களும் இதே கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கட்சிப் பத்திரிக்கைக்காக உறுதியாக நிற்பது:**

42. கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் கட்சிப் பத்திரிக்கைக்காக இடையறாது வாதிட வேண்டும்; அதன் எதிரிகளுக்கு எதிராக நின்று உறுதியாகப் போராட வேண்டும்; முதலாளித்துவப் பத்திரிக்கைகளுக்கு எதிராக உத்வேகத்துடன் போராட வேண்டும். முதலாளித்துவப் பத்திரிக்கையின் அப்பட்டமான நச்சுத்தன்மையை, போலித்தனத்தை, செய்திகளை இருட்டடிப்பு செய்தலை, எல்லா வகையான இரட்டை மோசடிகளை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்த வேண்டும்.

நாள்தோறும் மிகமிகக் கொடியதாகும் வர்க்க மோதல்களை மூடி மறைக்கும் சமூக ஜனநாயக மற்றும் சுயேச்சையான பத்திரிக்கையின் துரோகத்தனத்தை விடாப்பிடியாக அம்பலப்படுத்தி, அற்பமான விதண்டாவாதத்தில் ஈடுபடாமல், இடையறாத மற்றும் முன்னேறித் தாக்கும் விமர்சனத்தின் மூலம் இப்பத்திரிக்கைகளை வெற்றி கொள்ள வேண்டும். தொழிற்சங்கம் மற்றும் பிற தொழிலாளர்களது நிறுவனங்களின் உறுப்பினர்களைத் தவறாக வழிநடத்தும், முடமாக்கும் சமூக ஜனநாயக பத்திரிக்கைகளின் செல்வாக்கிலிருந்து பிய்த்தெடுக்க தொழிற்சங்க மற்றும் பிராக்‌ஷன்கள் நிறுவன ரீதியிலான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வீட்டுக்கு வீடு நமது பத்திரிக்கைக்காகப் பிரச்சாரம் செய்வதன் மூலம் குறிப்பாக ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் செய்வதன் மூலம் சமூக ஜனநாயக பத்திரிக்கைக்கு எதிரான நமது போராட்ட கூர்முனை சாதுரியமாக திருப்பி விடப்பட வேண்டும்.

## VIII. கட்சி நிறுவனக் கட்டமைப்பு பற்றி

43. பரந்து விரிந்ததாக உருக்குறுதி வாய்ந்ததாக கட்டியமைக்கப்படும். கட்சி நிறுவனமானது வெறும் புவியியல் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்படக் கூடாது. ஆனால் குறிப்பிட்ட மாவட்டத்தின் யதார்த்தமான பொருளாதார, அரசியல் மற்றும் போக்குவரத்து நிலைமைகளுக்குப் பொருத்தமாக அமைக்கப்பட வேண்டும். பிரதானமான மாநகரங்கள், பெரிய தொழிற்சாலை மையங்கள் கட்சி நிறுவனத்தின் ஈர்ப்பு மையமாக்கப்பட வேண்டும்.

ஒரு புதிய கட்சியைக் கட்டியமைக்கும்போது எடுத்த எடுப்பிலேயே நாடு முழுவதும் பரந்து விரிந்த கட்சி நிறுவனத்தைக் கட்டியமைக்கும் போக்கு தோன்றுவதுண்டு. கட்சியின் வசம் உள்ள ஊழியர்கள் வரம்புக்குட்பட்டிருப்பதையும், மிகச் சிலர்களே உள்ள இந்த ஊழியர்கள் எல்லா திக்குகளிலும் சிதறி இருப்பதையும்புறக்கணிப்பதாக உள்ளது இப்போக்கு. இது கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கும் திறனையும் வளர்ச்சியையும் பலவீனப்படுத்துகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பரந்த அளவில் கட்சி அலுவலகங்கள் தோன்றுகின்றன. ஆனால் கட்சியானது எந்த ஒரு மிக மிகப் பிரதானமான தொழில் நகரத்திலும் வேர்விட்டு வளர்வதில் வெற்றி பெறுவதில்லை.

**மாநில மற்றும் மாவட்ட நிறுவனங்கள்:**

44. கட்சி நடவடிக்கை அதிகபட்ச அளவு மையப் படுத்துவதை சாத்தியமாக்குவதற்கு ஒன்றுக்கொன்று கீழ் படிதலுள்ள மேலிருந்து கீழ்வரை கிரமமான பல குழுக்களைக் கொண்டதாக கட்சித் தலைமையைப் பிரித்து அமைப்பது உசிதமானதல்ல. ஒரு பொருளாதார, அரசியல் அல்லது போக்குவரத்து மையமாக விளங்கும் ஒரு மாநகரை மையமாக வைத்து ஒரு குறிப்பிட்ட பகுதி முழுவதையும்— அடுத்தடுத்த மாவட்டங்களை உள்ளடக்கி — அரசியல் பொருளாதாரத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு விரிந்து பரந்ததாக வலைப்பின்னல் போன்ற நிறுவனங்களை அமைக்கவேண்டும். பெரிய மையத்தைச் சேர்ந்த கட்சிக் கமிட்டி, கட்சியின் பொதுப் பேரவைக்கு தலைமை அமைப்பாக விளங்கவேண்டும்; அங்கிருந்து மாவட்டத்தின் நிறுவன நடவடிக்கையை நடத்தவேண்டும்; பகுதி உறுப்பினர்களின் நெருங்கிய தொடர்புடன் தனது கொள்கைகளை வழி நடத்த வேண்டும்.

மாவட்ட மாநாட்டினால் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்சி மத்தியக் கமிட்டியால் உறுதி செய்யப்பட்ட இத்தகைய ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த அமைப்பாளர்கள் உள்ளூர் நிறுவனங்களின் கட்சி வாழ்க்கையில் ஊக்கமான பாத்திர மாற்ற கடமைப்பட்டவர்களாவர். அந்தப் பகுதியைச் சேர்ந்த கட்சி ஊழியர்கள் அம்மாவட்டத்தினுடைய கட்சிக் கமிட்டிக்கு இடையறாது சேர்க்கப்பட வேண்டும். இதனால் அந்தக் கமிட்டிக்கும் அப்பகுதியைச் சேர்ந்த பெரு எண்ணிக்கையிலான மக்கள் திரளினருக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் ஏற்படும். வளர்ந்து வரும் போக்கில் மாவட்டத்தின் தலைமைக் கமிட்டியானது அப் பகுதியின் அரசியல் தலைமை உறுப்பாக வளர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு மாவட்டக் கமிட்டியானது மத்தியக் கமிட்டியுடன் இணைந்து பொதுவான கட்சி நிறுவனத்தில் உண்மையான தலைமைப் பாத்திரத்தை ஆற்றும் உறுப்பாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இயல்பாகவே கட்சி மாவட்டங்களின் எல்லைகள் அப் பகுதியுடனேயே வரம்பிட்டுக் கொள்வதாக இராது. ஒரு மாவட்டத்துக்குட்பட்ட பகுதியில் உள்ள உள்ளூர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் சீரான முறையில் வழிநடத்துகின்ற நிலையில் மாவட்டக் கமிட்டி இருப்பதே அதை தீர்மானிக்கும் காரணியாக இருக்க வேண்டும். இந்த நிலை சாத்திய மற்றதானவுடன் மாவட்டமானது பிரிக்கப்பட்டு புதிய கட்சி மாவட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பெரிய நாடுகளில் மத்தியக் கமிட்டியையும் உள்ளூர் நிறுவனங்களையும் இணைப்பதற்கான குறிப்பிட்ட இடை நிலை நிறுவனங்களை அமைப்பதும் அவசியமாகும். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் இந்த இடை நிலையிலுள்ள நிறுவனங்களுக்கு, எடுத்துக்காட்டாக மிக அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாநகரத்துக்கு முக்கிய இடம் கொடுப்பது அவசியமாகும். மையப்படுத்தலைப் பலவீனப்படுத்தும் என்பதால் ஒரு பொதுவிதி என்ற முறையில் இது தவிர்க்கப் படவேண்டும்.

**உள்ளூர் நிறுவனங்கள் :**

45. நாட்டுப்புற குழுக்கள், சிறு நகரக் கமிட்டிகள், மாவட்டக் கமிட்டிகள், மாநகரத்திலேயே பல்வேறு பகுதிக் கமிட்டிகள் ஆகிய உள்ளூர் நிறுவனங்களில் இருந்து பெரிய இடைப்பட்ட நிலையிலுள்ள நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

சட்டபூர்வமான கட்சியாக இருக்கையில் உள்ளூர் கட்சி நிறுவனம் ஒன்று தனது உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கக் கூடிய பொதுக் கூட்டங்களை நடத்த இயலாத நிலையை அடையும் அளவுக்கு வளர்ந்து விட்டிருக்குமானால் அந்த உள்ளூர் நிறுவனம் பிரிக்கப்பட வேண்டும்.

எந்த ஒரு கட்சி நிறுவனத்திலும் அதனுடைய உறுப்பினர்கள் அன்றாட நடவடிக்கைகளுக்கான குழுவாக அமைக்கப்பட வேண்டும். பெரிய நிறுவனங்களில் பல்வேறு குழுக்களைச் சேர்த்து கூட்டு அமைப்புகளாக நிறுவுவது உசிதமானது. பொதுவாக இத்தகைய உறுப்பினர்கள் அவர்கள் வேலை செய்யும் இடத்தில் ஒரு குழுவுக்குள் சேர்க்கப்பட வேண்டும். அல்லது வெவ்வேறு இடங்களில் இருப்பவர்களானால் தமது அன்றாட நடவடிக்கையில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்படியான குழுவாக அமைக்கப்பட வேண்டும். இத்தகைய கூட்டுக் குழுவின் நோக்கம் பல்வேறு சிறிய அல்லது வேலைக்கான குழுக்களுக்கிடையில் கட்சி வேலைகளைப் பகிர்ந்தளிப்பது, பல்வேறு நிர்வாகிகளிடமிருந்து வேலை அறிக்கைகளைப் பெறுவது மற்றும் தேர்வு நிலை உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பது ஆகியவையாகும்.

**பொதுவுடமை அகிலத்தின் செயற்குழு:**

46. கட்சி முழுவதுமே பொதுவுடமை அகிலத்தினுடைய வழிகாட்டுதலின் கீழ் இருக்கவேண்டும். அகிலத்தில் இணைந்துள்ள கட்சிகளின் வேலைகளை நெறிப்படுத்துகின்ற அகிலத்தினுடைய செயற்குழுவின் அறிவுறுத்தல்களும் (கட்டளைகளும்) தீர்மானங்களும் 1. கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு அல்லது 2. மத்தியக் கமிட்டியின் வாயிலாக விசேடமான கமிட்டிக்கு அல்லது 3. கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் என்று அனுப்பப்படவேண்டும்.

அகிலத்தினுடைய அறிவுறுத்தல்களும் (கட்டளைகளும்) தீர்மானங்களும் கட்சியையும், இயல்பாகவே கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் கட்டுப்படுத்தும்.

**மத்தியக் கமிட்டியும் அரசியல் தலைமைக்குழுவும்:**

47. கட்சி மத்தியக் கமிட்டி, கட்சியின் பேரவையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மத்தியக் கமிட்டி பேரவைக்கு பொறுப்பானதாகும். மத்தியக் கமிட்டி தனது உறுப்பினர்களிலிருந்து அரசியல் நடவடிக்கைக்காக இரு துணைக் கமிட்டிகளைத் தெரிவு செய்கிறது. இவ்விரு துணைக்கமிட்டிகளும் கட்சியினுடைய அரசியல் மற்றும் அன்றாட வேலைகளுக்குப் பொறுப்பானவையாகும். இத்துணைக் கமிட்டிகள் அல்லது குழுக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் முறையான கூட்டுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும். இக்கூட்டங்களில் உடனடி முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்கப்படும். பொதுவான மற்றும் அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்யவும் கட்சியில் உள்ள நிலைமைகள் நடப்புகள் பற்றித் தெளிவான முடிவுக்கு வரவும், இதுபோலவே கட்சி முழுவதன் வாழ்வைத் தீர்மானிக்கக்கூடிய முடிவுகள் எடுக்கப்படும்போதும் மத்தியக் கமிட்டியில் பல்வேறு பகுதிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது அவசியம். இதே காரணங்களால் போர்த் தந்திரங்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் — அவை மிகப் பாரதூரமான இயல்புடையவையாக இருக்கும் பட்சத்தில்—மத்தியக் கமிட்டி ஒடுக்கக் கூடாது. மாறாக இந்தக் கருத்துக்கள் மத்தியக் கமிட்டியில் பிரதிநிதித்துவம் பெறவேண்டும் ஆனால் சிறு குழு (அரசியல் தலைமைக் குழு) சீரானதாக அமைக்கப்பட்டு இயங்கவேண்டும். உறுதியான மற்றும் நிச்சயமான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் தலைமைக் குழுவானது தனது சொந்த அதிகாரத்தை மத்தியக் கமிட்டியின் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையை சார்ந்திருக்கவேண்டும்.

இத்தகைய அடிப்படையில் நடக்கையில் கட்சி மத்தியக் கமிட்டியானது குறிப்பாக சட்டபூர்வமான கட்சிகளில், கட்சி உறுப்பினர்களின் நிபந்தனையற்ற நம்பிக்கைக்கு அவசியமான கட்டுப்பாட்டுக்கு உறுதியான அடித்தளத்தை மிகவும் குறைந்த காலத்திலேயே அமைக்க இடமும். அதே வேளையில் எழுகின்ற ஊசலாட்டங்கள் மற்றும் தெரிய வருகின்ற விலகல்களை முறியடிக்க முடியும். கட்சியில் இத்தகைய மாறான போக்குகள் ஒரு கட்டத்துக்கு வளர்ச்சி அடையும் முன்பு, கட்சிப் பேரவையில் முடிவெடுக்கக் கொண்டு வரப்பட்டு நீக்கப்படக்கூடும்.

**வேலைப் பிரிவினை, துணைக் கமிட்டிகள்:**

48. வேலைகளின் பல்வேறு கிளைகளில் தேர்ச்சியை அடைவதற்கு ஒவ்வொரு மேல்மட்டக் கமிட்டியும் தனது உறுப்பினர்களுக்குள் தனது வேலைகளைப் பிரித்துக் கொள்ளவேண்டும் இதற்குப் பல்வேறு விசேடக்கமிட்டிகள்

—எடுத்துக்காட்டாக, பிரச்சாரத்துக்கானவை, பத்திரிக்கைகளுக்கானவை, தொழிற்சங்க இயக்கங்களை நடத்துவதற்கானவை, செய்தித் தொடர்புகளுக்கானவை இன்னும் பிறவற்றுக்கானவை என்று கமிட்டிகள்—அமைப்பது அவசியம். ஒவ்வொரு விசேடக் கமிட்டியும் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கோ, மாவட்டக் கமிட்டிக்கோ கட்டுப்பட்டதாகும்.

அனைத்துக் கமிட்டிகளின் நடவடிக்கைகள் மற்றும் சேர்க்கையின் (Composition) மீதான கட்டுப்பாடு குறிப்பிட்ட மாவட்டக் கமிட்டிகளின். இறுதியாகப் பார்க்கப்போனால், கட்சி மத்தியக் கமிட்டியின், கரங்களில் இருக்க வேண்டும், பத்திரிக்கை ஆசிரியர்கள், அமைப்பாளர்கள், பிரச்சாரகர்கள் இன்னும் இவை போன்ற பல்வேறு கட்சிப் பணிகளை ஆற்றுபவர்களின் வேலைகள் மற்றும் அலுவலகங்களை குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை மாற்றுவது—கட்சி வேலைகளில் அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தாதிருக்கும் பட்சத்தில்—உசிதமாகலாம். பத்திரிக்கை ஆசிரியர்கள் மற்றும் பிரசசாரகர்கள் ஏதாவது ஒரு கட்சிக் குழுவில் இருந்துகொண்டு முறையான கட்சிப் பணிகளில் பங்கேற்க வேண்டும்.

**கட்சியின் மத்தியக் கமிட்டி:**

49. கட்சியின் மத்தியக் கமிட்டியும் இது போலவே பொதுவுடமை அகிலமும் எந்த நேரத்திலும் தமது எல்லா பொதுவுடமைவாத நிறுவனங்களிடமிருந்து, உறுப்புகள் மற்றும் அவற்றின் தனிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து முழுமையான அறிக்கைகள் பெற உரிமை பெற்றுள்ளன. மத்தியக்கமிட்டியின் பிரதிநிதிகளும் அதனால் அதிகாரம் அளிக்கப்பட்டவர்களும் தீர்மானிக்கும் உரிமையுடன் எல்லாக் கூட்டங்களிலும் கூட்டத் தொடர்களிலும் அனுமதிக்கப்படுவர். கட்சியின் மத்தியக் கமிட்டி சர்வ அதிகாரமும் பொறுப்பும் உள்ள பிரதிநிதிகளை எப்போதும் தன் வசம் வைத்திருக்க வேண்டும். (அதாவது பல்வேறு மாவட்ட மற்றும் பிராந்திய தலைமை நிறுவனங்களுக்கு பொறுப்புள்ள அமைப்புகளுக்கும் தமது சுற்றறிக்கைகள், கடிதங்கள் மூலமாகமட்டுமின்றி நேரடியாகவும் வாய் வழியாகவும் அரசியல்—நிறுவனப் பிரச்சனைகள் பற்றி அறிவுறுத்தவும், அறிவிக்கவும் அனுப்பப்படும் கமிசார்களே இப்பிரதிநிதிகள்)

எந்த ஒரு நிறுவனமும் கட்சியின் எந்தக் கிளையும், தனிப்பட்ட உறுப்பினரும் கூட தனது விருப்பங்கள், ஆலோசனைகள், விமர்சனங்கள் அல்லது புகார்களை நேரடியாக, எந்த நேரத்திலும் கட்சி மத்தியக் கமிட்டிக்கோ அல்லது பொதுவுடைமை அகிலத்துக்கோ அனுப்ப உரிமை உண்டு.

**கீழ்மட்ட நிறுவனங்கள் மேல்மட்ட நிறுவனங்களுக்குக் கட்டுப்படவேண்டும்:**

50. கட்சியின் மேல்மட்ட நிறுவனங்களினுடைய அறிவுறுத்தல்கள் மற்றும் முடிவுகளுக்குக் கீழ்மட்ட நிறுவனங்களும், தனிப்பட்ட உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும். தலைமை நிறுவனங்களின் பொறுப்புகளும், கடமை தவறுவது அல்லது அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்துவதைத் தடுப்பதில் ஒரு பகுதி. அளவுக்கு மட்டுமே அதிகார பூர்வமாகத் தீர்மானிக்க முடியும். அவர்களது அதிகார பூர்வமான பொறுப்பு எந்த அளவுக்கு குறைவாயிருக்கிறதோ (உதாரணமாக சட்டவிரோதக் கட்சிகளில்) அந்த அளவுக்கு தலைமைக்கு கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை ஆய்வு செய்வது என்ற கடமை அதிகமாக உள்ளது. தலைமை, முறையான மற்றும் நம்பகமான தகவல்களைப் பெற்று முதிர்ச்சி மற்றும் தெள்ளத் தெளிவான பரிசீலனைக்குப்பின் தமது சொந்த முடிவுகளை எடுக்க வேண்டுவது அதன் பொறுப்பாகும்.

**51. கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தமது நடவடிக்கைகள் அனைத்திலும் எப்போதும் ஒரு போர்க்குணமிக்க நிறுவனத்தின் உறுப்பினர்கள் போல கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள்.**

பொருத்தமான நடவடிக்கை பற்றி கருத்து வேறுபாடு ஏற்படுமானால் சாத்தியமான அளவு கட்சிக்குள் நடந்த விவாதங்களில் வந்தடைந்த முடிவுகளின்படி கட்சி நடவடிக்கையானது தீர்மானிக்கப்பட வேண்டும். பிற உறுப்பினர்களின் கருத்துப்படி கட்சியின் அல்லது கட்சிக் கமிட்டியின்

பொ—4

முடிவு தவறாக இருந்தாலும்கூட ஒன்றுபட்ட முன்னணியின் ஐக்கியத்துக்கு தடங்கல் ஏற்படுத்துவதோ அல்லது முழுமையாக உடைப்பதோ கூடாது. அது கட்டுப்பாடற்ற நடவடிக்கையின் மிகமிக மோசமான உதாரணமாகும். இராணுவ ரீதியில் ஆக மிகப் பெரும் தவறாகும். இந்த உண்மையை தமது பொது நடவடிக்கையில் மாறுபட்ட கருத்துடைய தோழர்கள் காணத் தவறக் கூடாது.

பொதுவுடமை வாதத்தின் எதிரிகள் அனைவருக்கும் எதிராக பொதுவுடமைக் கட்சிக்காக எல்லாவற்றுக்கும் மேலாக பொதுவுடமை அகிலத்துக்காகப் போராடுவது கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரின் அதி உயர்ந்த கடமையாகும். மாறாக இதை மறந்து பகிரங்கமாக கட்சியையோ அல்லது பொதுவுடமை அகிலத்தையோ கண்டனம் செய்பவர் ஒரு மோசமான பொதுவுடமைவாதியாவார்.

52. கட்சியின் அமைப்பு விதிகள் பொதுவான கட்சி நிறுவனங்களின் பொதுவுடமைவாதவளர்ச்சியில் தலைமைக் கட்சி நிறுவனங்களுக்கு உதவக்கூடியதாக—தடையேற்படுத்துவதாக அல்ல—கட்சி நடவடிக்கைகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உதவக் கூடியதாக—தடையேற்படுத்துவதாக அல்ல—வகுக்கப்படவேண்டும். பொதுவுடமை அகிலத்தின் முடிவுகள் அதில் சேர்ந்துள்ள கட்சிகளால் உடனுக்குடன் அமுல்படுத்தப்படவேண்டும். இதற்காக ஏற்கனவே உள்ள நிறுவன அமைப்பு விதிகளிலும் கட்சி முடிவுகளிலும் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமானாலும் பின்னர் செய்து கொள்ளலாம்.

## IX. சட்டபூர்வமான மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள்

**தயாராயிருத்தல்:**

53. போராட்டங்களின் சூழ்நிலைகளில் ஏற்படக் கூடிய எல்லா மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னை எப்போதும் விரைந்து மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடியவாறு கட்சி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவிக்கப்பட்டுள்ள பெரு எண்ணிக்கையில் உள்ள எதிரியுடன் வெளிப்படையான மோதலைத் தவிர்க்க இயலக் கூடியதான போர்க்குணமிக்க நிறுவனமாக பொதுவுடைமைக் கட்சி வளர்க்கப்பட வேண்டும். ஆனால் மற்றொரு புறம் எதிரி குவிந்திருப்பதையே பயன்படுத்திக் கொள்வது எப்படி இருக்க வேண்டுமெனில், எதிரி எதிர்பாராத இடத்தில் தாக்குதல் தொடுக்கும்படியாக இருக்க வேண்டும். கலகங்கள் மற்றும் தெருச் சண்டைகள் அல்லது கடுமையான அடக்குமுறை சூழ்நிலைகளை மட்டுமே நம்பியிருப்பது கட்சி நிறுவனத்தின் மிகமிகப் பெரிய தவறாகும். திடுதிப்பென்று வரும் எதிர்கால நிலைமைகளை சமாளிக்க தயாராய் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு சூழ்நிலையிலும் பொதுவுடமையாளர்கள் ஆரம்ப கட்ட புரட்சிகர வேலைகளை துல்லியமாக செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் பெரும்பாலும் புயல்போன்ற மற்றும் அமைதியான காலங்கள் என்று மாறுவதை முன்கூட்டி கண்டறிவது கிட்டத்தட்ட அசாத்தியமானதாகும். முன்கூட்டி அறிவது சாத்தியமாயிருந்தாலும்கூட, பல சந்தர்ப்பங்களில் புனரமைத்தலுக்கு இந்த தொலைநோக்கைப் பயன்படுத்துவது இயலாது ஏனெனில் ஒரு பொதுவிதி என்ற முறையில் மாற்றம் மிகமிக விரைவாகவும் அடிக்கடியும் திடுதிப்பென்றும் நிகழ்வதாக உள்ளது.

## X. சட்டபூர்வமான மற்றும் சட்ட விரோதமான நடவடிக்கைகளை இணைப்பது

54. ஆயுதப் போராட்டத்திற்கு அல்லது பொதுவாக சட்ட விரோதமான போராட்டத்திற்கு முறையாக தயாரிக்கின்ற கட்சியின் முன்னுள்ள முக்கியத்துவம் வாய்ந்த இக்கடமையை முதலாளித்துவ நாடுகளிலுள்ள சட்டபூர்வமாக இயங்கும் பொதுவுடமைக் கட்சிகள் வழக்கமாகவே கிரகிக்கத் தவறுகின்றன. தாம் நிலைப்பதற்கு நிரந்தரமான சட்டபூர்வ அடிப்படையைச் சார்ந்திருப்பது மற்றும் சட்டபூர்வ கடமைகளை செய்வதற்கு ஏற்ப தமது வேலைகளைச் சார்ந்திருப்பது என்ற பிழையை பொதுவுடமை நிறுவனங்கள் அடிக்கடி இழைக்கின்றன.

மறுபுறம் சட்ட விரோதமாக இயங்கும் கட்சிகள் புரட்சிகர மக்கள் திரளினருடன் இடையறாத தொடர்புடைய ஒரு கட்சியைக் கட்டியமைப்பதற்கு சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் பயன்படுத்துவதற்கு அடிக்கடி தவறுகின்றன. இந்த முக்கிய உண்மைகளை அலட்சியப்படுத்தும் தலைமறைவு கட்சிகள் வியர்த்தமான கடமைகளுக்காக தமது உழைப்பை வீணாக்குகின்ற வெறும் சதிகாரக் குழுக்களாகிவிடும் அபாயத்திற்கு உள்ளாகின்றன.

இவ்விரு போக்குகளுமே பிழையானவை. தலைமறைவாக இருந்து இயங்குவதற்கான மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, புரட்சி வெடிப்புகளுக்கான, முழுமையான, தயாரிப்புகளை எவ்வாறு நிச்சயப்படுத்திக் கொள்ளுவது என்பதை சட்டபூர்வமாக இயங்குகின்ற ஒவ்வொரு பொதுவுடமைக் கட்சியும் அறிந்திருக்க வேண்டும். மறுபுறம், தீவிரமான கட்சி நடவடிக்கைகளின் மூலம் மகத்தான புரட்சிகர மக்கள் திரளினருடையே நிறுவன ரீதியிலான மற்றும் உண்மையான தலைவன் ஆவதற்கு ஒவ்வொரு சட்ட விரோதமாக இயங்கும் பொதுவுடமைக் கட்சியும், சட்ட பூர்வமான தொழிலாளர் இயக்கம் வழங்குகின்ற அனைத்து சாத்தியப்பாடுகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## சட்ட விரோதமான—சட்டபூர்வமான கட்சி நிறுவனங்கள் முழுக்க முழுக்க தனித் தனியானவை அல்ல

55. சட்ட பூர்வமாக இயங்குகின்ற தலைமறைவாக இயங்குகின்ற இரு கட்சி வட்டாரங்களிலுமே சட்டவிரோதமான பொதுவுடமைவாத நடவடிக்கைகள் பற்றி ஒரு தவறான போக்கு உள்ளது. பிற கட்சி நிறுவனங்களிலிருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் முற்றாகத் துண்டிக்கப்பட்ட தூய்மையான இராணுவ நிறுவனத்தை நிறுவுவதும் நிலை நிறுத்துவதும் என்ற போக்கே இது. இது முழுக்க முழுக்க பிழையானது. மாறாக புரட்சிக்கு முந்திய காலத்தில் போர்க் குணமிக்க நிறுவனங்களை உருவாக்குவது என்பது பொதுவுடமைக் கட்சியின் பொதுவான வேலைகளின் வாயிலாகவே பிரதானமாக சாதிக்கப்படுகிறது. புரட்சிக்கான போர்க்குணமிக்க நிறுவனமாக முழுக் கட்சியும் வளர்க்கப்பட வேண்டும்.

புரட்சிக்கு முந்திய காலத்தில் முந்திரிக் கொட்டைத்தனமாக அமைக்கப்படும் தனித் தனியான இராணுவ நிறுவனங்கள் கலைந்து போகும் போக்குகளையே வெளிப்படுத்தித் தீரும். ஏனெனில் அவற்றுக்கு நேரடியான மற்றும் பயனுள்ள கட்சி வேலை என்று எதுவுமில்லை.

56. தனது உறுப்பினர்களையும் கட்சிநிறுவனங்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்து விடாமல் பாதுகாப்பதும், இவ்வாறு கண்டுபிடிப்பதை சாத்தியமாக்குகின்ற பதிவு செய்தல், கவனக் குறைவாக நிதி மற்றும் நன்கொடை சேகரிப்பது, புரட்சி வெளியீடுகளை தராதரமின்றி கவனக் குறைவாக விநியோகிப்பது போன்றவற்றை தவிர்ப்பதும் ஒரு தலைமறைவுக் கட்சி செய்ய வேண்டியத் அவசியமே. இந்தக் காரணங்களால் ஒரு தலைமறைவுக் கட்சியானது சட்டபூர்வமான கட்சியின் அளவுக்கு வெளிப்படையான நிறுவன முறைகளை கடைப்பிடிக்க முடியாது. இருப்பினும் நடை முறை வாயிலாக நிறுவன முறைகளில் மேலும் மேலும் தேர்ச்சி பெற முடியும்.

மறுபுறம், ஒரு சட்டபூர்வமான மக்கள் திரள் கட்சியானது சட்ட விரோதமான வேலைகளுக்கும் போராட்டக் காலங்களை எதிர் நோக்கியும் முழுமையான தயாரிப்புகளுடன் இருக்க வேண்டும். எந்த விதமான சூழ்நிலைகளிலும், அது தனது தயாரிப்பை தளர்த்தவே கூடாது. அதாவது உறுப்பினர்களின் கோப்புகளுக்கு பிரதி எடுத்துப் பத்திரப் படுத்த வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கடிதங்களை அழித்து விட வேண்டும். முக்கிய ஆவணங்களை பத்திரமாக வைக்க வேண்டும். செய்தி எடுத்துச் செல்பவர்களுக்கு இரகசிய முறைகள் பற்றி பயிற்சி அளிக்க வேண்டும்.

சட்ட பூர்வமான அது போலவே சட்ட விரோதமான கட்சி வட்டாரங்களில், சட்ட விரோதமான நிறுவனங்களானவை முழுக்க முழுக்க இராணுவ நிறுவனங்களாக கட்சிக்குள்ளேயே மிகமிகத் தனிமைப் பட்டவையாக அமைக்கப்பட வேண்டும் என்று ஊகிக்கப்படுகின்றது. இந்த ஊகம் முழுக்கவும் பிழையானது. புரட்சிக்கு முந்திய காலத்தில், நமது போரிடும் நிறுவனங்களை உருவாக்குவது என்ற பொதுவுடமைக் கட்சியின் பொதுவான வேலையை பிரதானமாகச் சார்ந்திருக்க வேண்டும் முழுக் கட்சியுமே புரட்சிக்காக போரிடும் நிறுவனமாக ஆக்கப்பட வேண்டும்.

## புரட்சி நடவடிக்கைகளுக்குப் போதுமானதாக கட்சி நிறுவனம் இருக்க வேண்டும்

57. எனவே புரட்சிக்கு முந்திய காலத்திலேயே புரட்சியின் தேவைகளுக்குப் போதுமானதாக ஒரு போரிடும் நிறுவனத்தை உருவாக்கி உறுதிப்படுத்துவதை உத்திரவாதப் படுத்தக் கூடிய முறையில் நமது பொதுவான கட்சி வேலைகள் பிரித்தளிக்கப்பட வேண்டும். பொதுவுடமைக் கட்சியை வழி நடத்தும் தலைமையானது தனது நடவடிக்கைகள் அனைத்திலும், புரட்சியின் தேவைகளால் வழி நடத்தப்படுவது மகத்தான முக்கியத்துவமுடையதாகும். இத்தேவைகள் என்னவாக இருக்குமென்று முன்கூட்டியே சாத்தியப்பட்ட அளவு காண முடிவது மகத்தான முக்கியத்துவம் உடையதாகும். இது இயல்பாகவே எளிய விசயமல்ல. ஆனால் இது எந்த விதத்திலும் பொதுவுடமைவாத நிறுவனத் தலைமையின் இந்த முக்கிய விஷயத்தை கவனத்தில் கொள்ளாமல் விடுவதற்கான காரணமாக இருக்கக் கூடாது.

பகிரங்கமான புரட்சி எழுச்சிகளின் காலத்தில், கட்சி இயங்குவதில் பெரு மாற்றங்களுக்கு உள்ளாவது என்றமிகக் கடினமான மற்றும் சிக்கலான கடமைகளை மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி கூட எதிர் கொள்ள வேண்டியிருக்கும். தனது சக்திகள் அனைத்தையும் புரட்சி நடவடிக்கைகளுக்காக ஒரு சில நாட்களில் திரட்டவேண்டிய அவசியம் நமது அரசியல் கட்சிக்கு எழுவது சாத்தியமே. தனது சக்திகளைத் திரட்டுவதுடன் கூடவே தனது சேமிப்புச் சக்திகளையும் ஆதரவான நிறுவனங்களையும், அதாவது நிறுவனமாக்கப்படாத புரட்சிகர மக்கள் திரளினரையும்—கட்சியானது திரட்டவேண்டியிருக்கும். முறையான செஞ்சேனையை அமைப்பது என்பது இன்னமும் நிகழ்ச்சி நிரலில் எழாத பிரச்சனையாகவே இருக்கும். ஏற்கனவே நிறுவி அமைக்கப்பட்ட படையின்றி ஆட்சித் தலைமையின் கீழான மக்கள் திரளினரைக் கொண்டே நாம் வெற்றியடைய வேண்டியிருக்கும். இக்காரணத்தினால் ஒரு எழுச்சிக்காக சிறப்பாக தயாரிப்பு செய்யப்பட்டு ஒழுங்கமைக்கப்படாமலிருந்தால் கட்சியின் மிகத் தீர்மானகரமான முயற்சி கூட வெற்றி பெறாது.

## விசேடமான இரகசிய எந்திரத்தைக் கட்டியமைப்பது

58. புரட்சிகர மையத் தலைமை உறுப்புகள் கூட புரட்சி நிலைமைகளை தாக்குப் பிடிக்க இயலாதவை என்று நிருபிக்கப்பட்டிருப்பதை கண்டிருக்க முடியும். சிறு கடமைகளைப் பொறுத்த வரை பாட்டாளி வர்க்கம் மகத்தான புரட்சி நிறுவன அமைப்பாக்குதலை பொதுவாக சாதிக்க முடிந்துள்ளது. ஆனால் தலைமையகங்களில் எப்போதும் கிட்டத்தட்ட ஒழுங்கின்மை, குழப்பம், அராஜகம் ஆகியவை இருந்துள்ளன. சில நேரங்களில் மிகமிக எளிய வேலையை "பிரித்தளிப்பது" கூட போதுமான அளவு இல்லாமல் இருந்திருக்கிறது. உளவு அறியும் துறை எந்த அளவு மோசமாக ஒழுங்கமைக்கப்பட்டு இருக்குமென்றால் அடிக்கடி அது நன்மை செய்வதைவிட தீமையே கூடுதலாக செய்திருக்கிறது. இரகசிய அஞ்சல் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் நம்பகமானதாக இல்லை. இரகசிய அலுவலகம், மற்றும் அச்சிடும் வேலைகள் பொதுவாகவே அதிர்ஷ்டவசமான அல்லது துரதிர்ஷ்டவசமான வாய்ப்புகளின் தயவில் உள்ளன. எதிரி சக்திகளின் "தூண்டிவிட்டுக் காட்டிக் கொடுக்கும் ஏஜெண்டுகளுக்கு" இவை சிறந்த வாய்ப்புகள் அளிப்பவையாக உள்ளன.

குறிப்பிட்ட, இத்தகைய வேலைகளுக்காக கட்சியானது தனது நிர்வாகத்தில் விசேடமான துறையை ஒழுங்கமைக்காவிட்டால், இக் குறைகளை சரிப்படுத்த முடியாது. இராணுவ உளவறியும் வேலைக்கு நடை முறை அனுபவம், விசேடப்பயிற்சி, கூர்மதி ஆகியவை வேண்டும். அரசியல் போலீசுக்கு எதிரான இரகசிய வலைக்கும் இதுவே பொருந்தும் என்று கூறலாம் நீண்ட கால அனுபவத்தின் வாயிலாக மட்டுமே மன நிறைவுறத்தக்க முறையில் இரகசிய துறை உருவாக்கப்பட முடியும். இந்தச் சிறப்புத் தன்மை உடைய புரட்சி வேலைகள் அனைத்தையும் செய்ய சட்ட பூர்வமாக இயங்கும் ஒவ்வொரு பொதுவுடமைக் கட்சியும் தயாரிப்புகள் (அது எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி) செய்ய வேண்டும். மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முழுக்கவும் சட்ட பூர்வமான நடவடிக்கைகளின் வாயிலாகவே இத்தகைய இரகசிய நிறுவனங்களைப் படைக்க முடியும்.

எடுத்துக்காட்டாக, கூர்மதியுடன், ஏற்பாடு செய்யப்பட்டு சட்டபூர்வ பிரசுரங்கள் விநியோகிப்பது மற்றும் பத்திரிக்கைகளின் தொடர்பு ஏற்பாடுகள் ஆகியவற்றில் குறியீடு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இரகசிய அஞ்சல் மற்றும் போக்குவரத்து செய்தித் தொடர்புகளை நிறுவுவது முற்றிலும் சாத்தியமே.

www.padippakam.com

**ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரையும் புரட்சிக் கடமைகளுக்காக வளர்த்தெடுப்பது**

பொதுவுடமைவாத அமைப்பாளர் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் ஒவ்வொரு புரட்சிகர தொழிலாளியையும், எதிர்கால புரட்சிப் படையின் போராளி என்று நோக்க வேண்டும் இக்காரணத்தால் எதிர்காலத்தில் அவர் ஆற்றப் போகின்ற பாத்திரத்திற்கு ஏற்ற ஒரு இடத்தை அவருக்கு ஒதுக்க வேண்டும் அவருடைய இப்போதைய நடவடிக்கை உபயோகமானதாக கட்சியின் இப்போதைய வேலைக்கு அவசியமானதாக—இருக்க வேண்டும். மற்றபடி வெறும், (வரட்டுத்தன்மான) பயிற்சியாக இருக்கக்கூடாது. ஏனெனில் நடைமுறை ஊழியர் இதை நிராகரித்து விடுவார் இத்தகைய நடவடிக்கை ஒவ்வொரு பொதுவுடமை வாதிக்கும், மிக அத்தியாவசியமான இறுதிப் போராட்டத்துக்கான ஆக மிகச் சிறந்த தயாரிப்பு என்பதை யாரும் மறக்கவே கூடாது.

## விளக்க குறிப்புகள்

1) **முதலாவது அகிலம்:-** (First International). 1864 செப்டம்பர் 28-ல் இலண்டன் நகரில் செய்ண்ட் மார்ட்டீன் அரங்கில் துவக்கப்பட்டது! 1889-ல் இரண்டாவது அகிலம் நிறுவிய பிறகுதான், 1864-ல் நிறுவிய அகிலத்தை முதலாவது அகிலம் என்று அழைப்பது ஏற்பட்டது. முதல் அகிலத்தின் பெயர் 'சர்வதேச தொழிலாளர்களின் கழகம்' (International Workingmen's Association) ஆகும். "முதல் சர்வதேசிய தொழிலாளர் கழகத்திற்கு அது பிறந்த முதல் நாளிலிருந்து காரல் மார்க்ஸ் தன் அறிவின் விளக்காகவும் மிகச் சிறந்த கொள்கை வகுபபோனாகவும் ஆசானாகவும் விளங்கினார்" என்று அகிலத்தில் கலந்து கொண்ட பல தலைவர்களும் கூறினர். பக்கூனியவாதிகளும் பிளாங்கிய வாதிகளும் அப்பட்டமான தொழிற்சங்கவாதிகளும் அகிலத்தில் ஆரம்பத்திலிருந்தே மார்க்சியத்தை எதிர்த்து வந்தனர். இறுதியில், அவர்களது பிளவுவாத நடவடிக்கைகளினால் முதல் அகிலம் 1876-ல் கலைக்கப்பட்டது.

2) **இரண்டாவது அகிலம்:-** (Second International) பாரிஸ் நகரில் 1889-ம ஆண்டு ஜூலை 14-ம் தேதியன்று, அதாவது; பிரஞ்சுப் புரட்சியில் 'பாஸ்டில்' சிறை வீழ்ந்த 100-வது ஆண்டு விழாவன்று இரண்டாவது அகிலம் அமைக்கப்பட்டது. இதற்கென நடந்த மாநாட்டை ஜெர்மன் மார்க்சியவாதிகள் அழைக்க, பிரஞ்சு மார்க்சியவாதிகள் கூட்ட 20 நாடுகளிலிருந்து, 391 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதல் ஏகாதிபத்திய யுத்தம் ஏற்படும் தருவாயில் இரண்டாம் அகிலத்தில் 22 நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் கட்சிகளும் சோசலிஸ்டு கட்சிகளும் 27 இருந்தன. ஒருகோடியே 20இலட்சம் தொழிலாளர் கள்அதன் செல்வாக்கின் கீழ் இருந்தனர். இது சோசலிஸ்டு கட்சிகளின் சர்வதேசச் சங்கமாக இருந்தது.

இரண்டாவது அகிலம் மேலும், மேலும் அதிகமாய் சந்தர்ப்பவாதத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. முதல் ஏகாபத்திய உலக யுத்தம் மூண்டபின் இந்த அகிலம் பகை கோஷ்டிகளாக சிதைவுண்டு, ஒவ்வொரு கோஷ்டியும் அதன் "சொந்த" நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன் பகிரங்கமாகவே சேர்ந்து கொண்டது. இரண்டாவது அகிலத்தில் இணைந்திருந்த மிகப் பெரும்பாலான கட்சிகள் சமூகதேசிய வெறி நிலையை ஏற்றன. அதாவது, அவை தொழிலாளி வர்க்கத்தின்; அனைத்து உழைப்பாளி மக்களின் நலன்களுக்குத் துரோகமிழைத்து யுத்தத்தில் ஏகாதிபத்திய அரசாங்கங்களை ஆதரித்தன. ஆகவே சித்தாந்த வழியிலும் நிறுவன வழியிலும் இரண்டாவது அகிலம் தகர்ந்திட நேர்ந்தது; சர்வதேசப் பாட்டாளி வர்க்க நிறுவனமாக நீடிக்க முடியாமல் மடிந்தொழிய நேர்ந்தது. சமூக தேசிய வெறி மற்றும் சந்தர்ப்பவாதப் போக்கிற்கு தலைமை தாங்கியவர்கள் காவுத்ஸ்கியும் வண்டர்வேல்டும்.

3) **மஞ்சள் அல்லது பெர்ன் அகிலம்:-** இரண்டாம் அகிலத்தில் எப்பொழுதுமே இடது, வலது, நடுநிலை என்றிருந்தது இவை நாளடைவில் கெட்டிப்பட்டு மூன்று அகிலங்களாகப் பிரிந்தன. வலது சந்தர்ப்பவாதிகள் இரண்டாம் அகிலத்தை புதுப்பித்துக் கொண்டனர். 1919-ம் ஆண்டு பிப்ரவரியில் பெர்னில் கூடிய சோசலிஸ்டுக் கட்சிகளுடைய மாநாட்டில் இது நடந்தது. இதுவே மஞ்சள் அல்லது பெர்ன் அகிலம் எனப்படுவதாகும்.

4) **இரண்டரையாவது அகிலம்:-** (Second-and-half-International) நடுநிலையாளர்கள் 1921 பிப்ரவரியில் வியன்னாவில் கூடி ஒரு ஸ்தாபனத்தை நிறுவினர். இது 'வியன்னா சங்கம்' அல்லது 'இரண்டரையாவது அகிலம்' என்று அழைக்கப்பட்டது. இதன் அதிகாரபூர்வமான பெயர் 'சோசலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசக் கழகம்' என்பதாகும். புரட்சிக்கர மக்கள் திரளினரின் நிர்ப்பந்தம் காரணமாய் இரண்டாவது அகிலத்திலிருந்து பிரிந்து சென்ற மையவாத சோசலிஸ்டுக் கட்சிகள், கோஷ்டிகளின் சர்வதேச நிறுவனம். இரண்டாவது அகிலத்தை குறை கூறிவிட்டு இரண்டரையாவது அகிலத் தலைவர்கள் உண்மையில் பாட்டாளி வர்க்க இயக்கம் குறித்த தலைமையான எல்லாப் பிரச்சினைகளிலும் தொழிலாளி வர்க்கத்தினுள் சந்தர்ப்பவாத, பிளவுவாதக் கொள்கைகளையே கடைப்பிடித்தனர். பாட்டாளி மக்கள் திரளினரிடையே ஓங்கி வந்த பொதுவுடமையாளர்களின் செல்வாக்கிற்கு எதிரிடையாய் அவர்கள் இந்த அகிலத்தைப் பயன்படுத்த முயன்றனர்.

இந்த அகிலம் முதலாளித்துவ ஜனநாயகத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சட்டமன்றங்களையும் சோவியத்துகளையும் சமரசப்படுத்த முயற்சி எடுத்தது. அதே சமயத்தில் எல்லோரையும் கொண்டதோர் அகிலத்தை நிறுவ வேண்டும் என்றும், அந்தந்த நாட்டின் கட்சி பரிபூரண சுதந்திரத்துடன் இயங்க வேண்டும் என்றும், தேசியக் கட்சிகள் விருப்பபூர்வமாகத் தான் முடிவுகளை ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டுமேயல்லாது பெரும்பான்மையோர் முடிவுகளை கொண்டு அவைகளைக் கட்டுப்படுத்தலாகாது என்றும் இந்த அகிலம் கூறியது

1923-ம் ஆண்டு மே மாதத்தில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் சோசலிஸ்டுத் தொழிலாளர்களின் அகிலம் என்ற பெயரில் ஒன்று சேர்ந்து கொண்டன.

5) **மூன்றாவது அகிலம்:-** (Third International): லெனினது முன்முயற்சியால் 1919-ம் ஆண்டு மார்ச் 2ம் தேதியிலிருந்து 6-ம்தேதி வரை மாஸ்கோவில் நடைபெற்ற முதலாவது காங்கிரசாகிய நிறுவக காங்கிரசில் பொதுவுடமை அகிலம் (Communist International) நிறுவப்பட்டது. இதுதான் மூன்றாவது அகிலம் எனப்படுவதாகும். மூன்றாவது அகிலம் ஜனநாயக மத்தியத்துவ கோட்பாட்டின்படி இயங்கியது. அதில் எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு உறுப்பு நாடுகளின் பொதுவுடமைக் கட்சிகளும் அவைகளின் உறுப்பினர்களும் கட்டுப்பட்டவர்கள்.

இரண்டாவது அகிலத்தின் காலத்தில் மார்க்சியத்தை ஏற்று அமுல்படுத்தியவர்களும் அதை திரித்துப் புரட்டியவர்களும் ஒருங்கே தங்களது கட்சிகளை சமூக ஜனநாயக கட்சிகள் என்று அழைத்து வந்தனர். தோழர் லெனினது முன்முயற்சியால் 1917-18-ம் ஆண்டுகளில் 'சமூக-ஜனநாயகம்' என்பது விலக்கப்பட்டு 'பொதுவுடமை' என்ற பதம் பயன்படுத்தப்பட்டது

'மார்க்சும் எங்கெல்சும் எப்பொழுதுமே 'சமூக ஜனநாயகம்' என்ற பதத்தை எதிர்த்து வந்தனர். காரணம், அவர்கள் எந்தக் கொள்கைக்காக நின்றனரோ, அந்தக் கொள்கையை இந்தப் பதம் குறிப்பதில்லை என்றும், சரியான பதம் 'பொதுவுடமை' தான் என்றும், அதுமட்டுமின்றி இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் துரோகம் செய்து சந்தர்ப்பவாதிகளாக மாறி விட்டதினால் மக்களிடையே 'சமூக ஜனநாயகம்' என்ற பதம் துர்நாற்றம் அடிக்கத் தொடங்கி விட்டது என்றும், இனி 'பொதுவுடமைவாதி' என்று நம்மை நாம் அழைத்துக் கொள்வதுதான் தத்துவார்த்த ரீதியாக சரியாக இருக்கும்' என்று லெனின் கூறியதை மூன்றாவது அகிலத்தின் முதல் காங்கிரஸ் அப்படியே ஏற்றுக் கொண்டது. (இதைப் பற்றி மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள லெனின் எழுதிய 'ஏப்ரல் ஆய்வரைகள்' என்ற நூலைப் பார்க்கவும்)

1943ஆம் ஆண்டு மூன்றாவது அகிலம் கலைக்கப்பட்டது. 'தொழிலாளி வர்க்க இயக்கம் வளர்ந்தோங்கியும் அதன் பணிகள் மேலும் மேலும் சிக்கல் வாய்ந்தனவாகியும், போராட்ட நிலைமைகள் வெகுவாய் மாறுபட்டும் சென்றதைத் தொடர்ந்து, ஒரே மையத்திலிருந்து பொதுவுடமைக் கட்சிகளுக்கு வழிகாட்டுவதென்பது இயலாததாகியது' என்ற அடிப்படையில் 1943 மே மாதத்தில் பொதுவுடமை அகிலத்தின் செயற்குழுவின் தலைமைக்குழு முடிவெடுத்து அகிலத்தைக் கலைத்தது.

6. **ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலம்:—** 1919 ஜூலையில் ஆம்ஸ்டர்டாமில் இது ஏற்படுத்தப்பட்டது. பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சீர்திருத்தவாத தொழிற்சங்கங்களையும் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனத்தையும் இது உள்ளடக்கி இருந்தது.

www.padippakam.com

ஆம்ஸ்டர்டாம் அகிலம் ஒரு சீர்திருத்தவாதக் கொள்கையை மேற்கொண்டது. முதலாளித்துவத்துடன் வெளிப்படையாகவே கூடிக் குலாவியது; தொழிலாளர் இயக்கத்தில் ஐக்கிய முன்னணியை எதிர்த்தது. சோவியத் யூனியனுக்கு எதிராக பகைமையான கண்ணோட்டத்தைக் கடைப்பிடித்தது. இவைகளின் விளைவாக, தொழிலாளர் இயக்கத்தில் அதன் செல்வாக்கு படிப்படியாகக் குறைந்தது. இரண்டாவது ஏகாதிபத்திய யுத்த சமயத்தில் இந்த அகிலம் ஏறத்தாழ செயலற்றுப் போனது. 1945-இல் உலக தொழிற்சங்கங்களின் கூட்டிணைப்பு உருவாகியதைத் தொடர்ந்து இது கலைந்து போனது. இந்த அகிலத்தின் தலைவர்கள் தான் ஆம்ஸ்டர்டாம் மஞ்சள் தொழிற்சங்க தலைவர்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

7. புரட்சிகர சிண்டிகலிசம்:— 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தோன்றிய குட்டி முதலாளித்துவ அரை-அராஜகவாதப் போக்கு.

சிண்டிகலிஸ்டுகள் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அவசியத்தை மறுத்தனர். கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தேவையையும் நிராகரித்தனர். புரட்சி இல்லாமலேயே தொழிற்சங்கங்கள் (சிண்டிகேட்டுகள்) தொழிலாளர்களது பொது வேலை நிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத்தை வீழ்த்தி விடலாம், பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் கொண்டு வந்து விடலாமென்று கூறினர்.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்